தமிழ் முரசு

2-2

நல்ல படங்கள்தான் தேவை
வ
நா கள் தருகிறோம் நான்கு ம
ரிக
அபிமன்யு
வேலைக்கா
ரி
மோகினி
கிருஷ்ணவிஜ
யம
ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்
மதராஸ் &
திருப்பூர்

நிலையத்தின் இணையற்ற நூல்கள்

மிழரசுக் கழகத் தலைவர்—'தமிழ் முரசு' ஆசிரியர்
திரு. ம. பொ. சிவஞானம் எழுதிய

தூரல் ரூ. 2—0—0

ர் தனி இனமா? தமிழ்நாடு தனிநாடா? தமிழகத் சுதந்திரத் தமிழரசை நிறுவ முடியுமா? அப்படி யுவது அகில இந்திய ஒற்றுமைக்குப் பொருந்துமா? திரத் தமிழரசு சோஷலிசப் பாதையில் சென்று மக்க ச் சுகவாழ்வு தருமா? என்ற பல்வேறு பிரச்னைகளை முரசுக் கழகத்தின் கருத்துக்களை விளக்கி எழுதப் நூல்.

டிய தமிழன் ரூ, 1—4—0

ளையனே வெளியேறு' என்ற எண்ணத்திற்கு வித் யவர் வீரர் வ. உ. சிதம்பரனார். அதற்காக ஏகாதி திர்ப்புப் போரில் அவர் செய்த தியாகங்கள் எண் அவரது வாழ்க்கையே புரட்சியின் இலக்கணம். மிகநன்றாக இந்நூலில் எழுதியிருக்கிறார் ம. பொ. சி.

ரமும் தமிழரும் ரூ. 0—8—0

டய இலக்கியங்களை அரசியல் நோக்குடன் ஆராய் வற்றில் உள்ள இந்தக் காலத்திற்கேற்ற கருத்துக் க்களுக்குப் பயன்படுமாறு செய்வதற்கு இந்நூல் வழிகாட்டி.

லயம்

ய நகர்

-17

தமிழரசுப் போராட்டத்திற்கு வழி காட்டியாக பல நூல்கள் விரைவில் வெளிவரும்.

தமிழிலுள்ள எந்தப் புத்தகம் தேவை யானாலும் எங்களுக்கு எழுதுங்கள்.

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி : உ	ஆசிரியர் : ம. பொ. சிவஞானம்	பகுதி உ

பொருளடக்கம்

ஆனந்தப் பொங்கல் — தலையங்கம் ... ச
தமிழ்த் திருநாள்? — கு. சா. கிருஷ்ணமூர்த்தி ... அ
கோவை தீர்ப்பளிக்கும் — ம. பொ. சிவஞானம் ... கம
தமிழரசு — சக்திமோகன் ... கஎ
பொங்கலன்று தமிழன் குரல் — கூ. ப. நடராஜன் ... உகூ
மொழி மோகம் — ஆ. ஷண்முகசுந்தரம் ... உச
புதுக்கோட்டை தமிழரசாக இருக்க வேண்டுமா? — க. நாராயணன் ... உஅ
தமிழ்வீரன் குமரன் — கா. லட்சுமணன் ... கூஎ
அந்த நாள் (தொடர் கதை) — மு. வரதராசனார் ... சக
ஆசிரியருக்குக் கடிதம் ... ருகூ
உறவும் உரிமையும் — ஞானப்பிரகாசம் ... ருச
தமிழரசுக் கொடி — கொ. மொ. ஜனார்த்தனம் ... சுக
பெண்களை உயர்த்துவோம் — சரஸ்வதி பாண்டுரங்கம் ... சுஎ
வாழும் நாள் என்நாளோ? — "ஞானம்" ... எம
பொங்கலோ பொங்கல்! — அ. இராமநாதன் ... எசு
கலை இன்பம் — ச. மு. பிள்ளை ... எஅ

விலை 6 அணா — 15-1-48

ஆனந்தப் பொங்கல்

தமிழருக்கு இன்று பொங்கல் திருநாள். இது ஒரு சமயத்திற்கு மட்டுமுரிய திருநாளன்று; சமூகம் முழுவதற்கும் உரிய பெருநாள். சாதி, சமய வேற்றுமை யின்றி தமிழராய்ப் பிறந்தோர் அனைவரும் கலந்து கொள்ளும் பெருமை படைத்தது இப் பொங்கல் நன்னாள். அதனாற்றான், 'தமிழ்த் திருநாள்' என்ற பெயரில் புலவர்கள் கொண்டாடி வந்த இந்நாளை, 'தமிழர் திருநாள்' என்ற பெயரில் படித்தவர், படியாதவர் எல்லோரும் கலந்து கொள்ளும் தேசியத் திருநாளாக மாற்றினர் தமிழரசுக் கழகத்தார்.

அதுமட்டுமல்ல; தமிழகத்தின் விடுதலை பற்றி தமிழினத்தின் உரிமை பற்றி, தமிழ் மொழியின் உயர்வுபற்றி எல்லாத் தமிழர்களும் ஒன்றுகூடிச் சிந்திக்கும் நாளாகவும் செய்து விட்டனர். பொங்கல் நாள் தமிழகத்து இல்லங்களில் புது அரிசி பொங்கும் நாள் மட்டுமல்ல; தமிழன் உள்ளத்தே புதுப்புது எண்ணங்கள் பொங்கி எழும் நாள். அந்த எண்ணங்களை இயக்கமாக மலரவைக்கத் திட்டமிடும் நாள் தமிழர் திருநாள்.

தமிழகம் அரசுரிமை பெறவில்லை; தமிழ் இனத்தின் அல்லலெல்லாம் தீரவில்லை. என்றாலும், ஆங்

கில ஏகாதிபத்தியத்தை அகற்றிய பின்னர் நாம் கொண்டாடும் முதல் பொங்கல் விழா இதுவாதலால், இந்த ஆண்டு பொங்கல் விழாவுக்குத் தனிச் சிறப்புண்டு.

மேற்கிலிருந்து ஆட்சிபுரிந்த ஏகாதிபத்தியத்திற்கு முடிவுகட்டினேம். "இனி அடுத்தபடி என்ன?" என்று சிந்திக்கும் நாளாக இருக்கட்டும் இந்த ஆண்டு தமிழர் திருநாள்.

போகியன்று நள்ளிரவில், வீதிக்கு வீதி, முச்சந்தி தோறும் தமிழ் இளங்காளையர் மூட்டும் தீ போன்று, தமிழ் மக்களின் உள்ளத்தே உரிமைக் கனலை மூட்டுவோம் என்று ஒவ்வொரு ஆணும், பெண்ணும் உறுதி கொள்ளட்டும்.

போகித் தீயில் காட்டிச் சூடேற்றி நமது குழந்தை உலகம் கொட்டும் சிறுமேளம் தமிழரசுப் போர் முரசமாக முழங்கட்டும்.

இந்த ஆண்டு தமிழ் மக்களின் சிந்தனையில் வெ[illegible]யேறி, செயலிலே வெற்றி கண்டால், அடுத்த ஆண்டு தைத் திங்கள் அதிகாலை நாம் சுதந்திரக் கதிரவனுக்குப் பொங்கலிடுவோம். அந்தப் பொங்கல் தான் **ஆனந்தப் பொங்கல்.**

மேற்சொன்ன சிந்தனைகளைத் தூண்டி செயலாற்ற வேண்டிக் கொண்டு தமிழகத்தாருக்கும் தமிழ

கத்திற்கு வெளியே கடல்கடந்த நாடுகளிலே வாழும் எல்லாத் தமிழர்களுக்கும் நமது பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழினம்!
வாழ்க தமிழகம்!

குமரனை மறவாதீர்!

அறிஞர்களை, வீரர்களை அவர்கள் வாழுங் காலத்தில் போற்றாது செத்த பிறகு திருவிழாக் கொண்டாடுவது தமிழகத்திற்கே உரிய தனிக் குணங்களிலொன்று. ஆனால், இன்று நிலைமை மாறி வருகின்றது. சிதம்பரனார் விழாவைத் தமிழகத்தில் மட்டுமன்றி, தமிழர் வாழும் சிங்களம், மலேயா போன்ற பிறநாடுகளில் வாழும் தமிழரும் சிறப்பாகக் கொண்டாடினர்.

இதோ இன்னொரு மாறுதல். வீரக் குமரன் இறந்த பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் முதன் முதலாக அந்தத் தியாகிக்குத் திருநாள் கொண்டாடுமாறு தலைவர் காமராஜர் அறிக்கை விடுத்துள்ளார். சுற்றி அடிக்கும் தமிழக் காற்று 'நரசிங்க புரத்தை'யும் சிறிது நகரச் செய்திருக்கிறது. காலங் கடந்த செயலாயினும் காமராஜருக்கும் கண் திறந்ததே என்று களிப்படைகிறோம்.

வீரக் குமரனின் தியாகத்திற்கு இன்னொருவரை ஈடு சொல்ல முடியாது. இதுவெறும் புகழ்ச்சியல்ல; உண்மை. சுதந்தரப் போரில் வேறுபல துறைகளில் பலர் தியாகம் செய்ததுண்டு. ஆனால், கொடியின் மானத்தைக் காக்க உயிர் கொடுத்தவர் குமரனையன்றி வேறு யாருமில்லை. அவருக்கே அந்த நல்வாய்ப்பு கிடைத்தது.

குமரனின் தியாகத்தைப் பற்றிய விரிவுரைப் பே
தான் தேர்தல் காலத்தில் மஞ்சள் பெட்டிகளில் வாக்கு
குவித்தன. செத்தும் காங்கிரசுக்கு வெற்றிதந்த
குமரனுக்கே உரியது. ஆனல், நமது தலைவர்களைப் பொ
வரையில், "தியாகி குமரனின் திருநாமம் தேர்தல் கால
சொல்லிவிட்டு மற்ற காலத்தில் மறந்துவிடும் மந்தி
விட்டது". இது தமிழ்மரபுக் கொவ்வாத நன்றி
செய்கை. குமரனைப் போன்ற தியாகிகளை மறப்பது தலை
குரிய தகுதியாகாது.

தியாகி குமரனுக்குச் சிலை யெழுப்ப வில்லையே
கூறும் தோழர் லட்சுமணன் கட்டுரையைப் பிரதோரிட
பிரசுரித்திருக்கிறோம். தமிழகம் அவரது வேண்டுகோ
நிறைவேற்றுமாக. தமிழ் நாட்டுத் தலைவர் அம் முயற்
ஈடுபட வேண்டும். இல்லையேல், தமிழ் நாட்டில் செல்
குள்ள பலர்கூடி ஒருகுழு அமைத்து, நிதி திரட்ட வேண்
ஏழைக் குமரன் பெயரால் பணக்காரர்களிடம் சென்று
ளிக் காசுகளைத் திரட்டுவது அரிது. என்றாலும் பாட்ட
மக்களிடம் சென்று செப்புக் காசுகளாகவேனும் திரட்டி கு
னுக்கு நினைவுச் சின்னம் எழுப்பியாக வேண்டும். பாரதி
மண்டபம் கட்டிய தமிழகம், சிதம்பரனாருக்கு நிதி திரட்
தமிழகம், குமரனை மறக்குமாகில், அதை ஏழைக் கிழை
அநீதியாக எண்ணி உலகம் எள்ளிநகையாடும்—தமிழகத்
குமரனை மறவாதீர்!

தமிழ்த் திருநாள்...?

கு. சா. கிருஷ்ணமூர்த்தி

●

முற்காலம்

சரித்திரத்தால் தமிழ்நாட்டின் வரலாற்றை
வரையறுத்துச் சகத்தின் மீது
விரித்துரைக்கக் காலவரை விளங்காமல்
அறிஞரெலாம் விழித்திட்டாலும்
திருத்தமிழர் இயற்கையெழில் செல்வமெனுஞ்
"செழுங்கதிரே" தெய்வ மென்ற
கருத்தினையே தமிழ்த்திருநாள் காட்டுமெனக்
கண்டதுண்டு கலை வல்லார்கள்!

இடைக்காலம்

உண்ணுகின்ற உணவுமுதல் உயிர்க்குலத்துக்
குயர்வையெல்லாம் உவந்து நன்மை
பண்ணுகின்ற காரணத்தால் பயனுணர்ந்த
தமிழினத்தார் "பரிதி" யென்னும்
விண்ணுயர்ந்த இயற்கையெழில் வேந்தனுக்குப்
பொங்கல் வைத்து விழா நடாத்தும்
எண்ணமுற்றார்! இவ்வழியே இயற்கையெலாம்
இறைவனெனும் ஏற்றங்கண்டார்!

பிற்காலம்

போற்காலப் பெருமையுறு புனிதமிகுந்
தமிழினத்தின் புகழையெல்லாம்
பிற்கால மிவணடைந்த பிறயினத்துச்
சூழ்ச்சிநிறை பிற்போக்காளர்

கற்காலத் தினுங்கடையாய் ஆக்கிவிட்டார் !
கற்பனைப்போய்க் கதைகள்கட்டி !
நற்கால வாழ்வினுக்கு வழிவகுக்க
வகையின்றி நலிந்தோம் அன்று !

4. இக்காலம்

வருகின்ற தைத்திங்கள் "மீத்தமிழர் பொங்கல்விழா"
வளர்க்கும் இன்பம் !
தருகின்ற பழமைமிகு தமிழ்க்கொடியை
வான்உயர்த்தித் தமிழரெல்லாம்
திருநின்ற தமிழகத்தில் ஒப்பிடமைத்
தமிழாட்சித் திட்டந்தன்னை
வரைகின்ற, வளர்க்கின்ற, வாழ்த்துகின்ற,
"திருநாளாய்" வாய்க்க வேண்டும் !

5. வருங்காலம்

அடுத்துவரும் "தமிழ்த்திருநாள்" அருந்தமிழர்
உரிமைபெற்ற ஆட்சியின்கீழ்
நடத்துதற்குப் படைதிரட்டிக் கட்சிகளின்
பூசல்என்னும் நலிவை ஓட்டித்
தொடுத்திடுவோம் போர்! இன்றே !
ஆதிக்கவாதிகளைத் தொலைக்கக் கையில்!
எடுத்திடுவோம் புலி,வில்,மீன் இலங்கு தமிழ்க்கொடி!
மறுகை எடுப்போம் வாளை !

கோவை தீர்ப்பளிக்கும்

ம. பொ. சிவஞானம்

கோவை அரசியல் மாநாட்டுத் தலைவர் தேர்தலில், திரு. காமராஜருக்கு வெற்றியும், எனக்குத் தோல்வியும் கிடைத்திருப்பது அனைவரும் அறிந்ததே. சாதாரணமாக, இரண்டு நாள் தலைமைக்காக இத்தகைய ஒரு பலமான போட்டி நிகழ்ந்தது தமிழகத்து அரசியல் வரலாற்றில் இது தான் முதல் தடவையாகும். இந்தத் தேர்தலில் எனக்கு வாக்களித்தோர், எனக்காகப் பாடுபட்டோர் எல்லோருக்கும் எனது நன்றி.

பணம் படைத்தோர், பதவியிலிருப்போர், சூழ்ச்சித் திறனுடையோர் எல்லோரும் காமராஜர் பக்கம் வேலை செய்தும், பதிவான வாக்குகளில், மூன்றிலொரு பங்கு எனக்குக் கிடைத்திருப்பது அதிசயிக்கத்தக்கதே. தேர்தல் விண்ணப்பம் ஒன்றை வெளியிட்டதைத்தவிர, எனது வெற்றிக்காக நான் செய்த முயற்சி ஒன்றுமில்லை. எனினும், இதுகாறும் காங்கிரஸைத் தங்கள் கண்ணீரும் செந்நீரும் சிந்திக் காத்த வீரத் தொண்டர்களில் சிலர் என் பக்கம் நின்றனர். பெரிய மனிதர்களின் அதட்டல் உருட்டல் களுக்கு அஞ்சாது பாடுபட்டனர். இதில், ராஜாஜி கோஷ்டி —காமராஜ் கோஷ்டி என்ற கோஷ்டிகளின் மோதலில்லை. ராஜாஜி கோஷ்டியினர் என்று தங்களை விளம்பரப் படுத்திக்

கொண்டு, அவரது நிழலில் சென்று அசெம்பிளி, அரசியல் நிர்ணய மன்றம், அமைச்சர் குழு ஆகியவற்றில் பதவிபெற்ற 'பெரிய மனிதர்'கள் பலர் திரு. காமராஜருக்காக வேலை செய்தனர். இதனால்தான் காமராஜர் வெற்றி பெறுவது எளிதாயிற்று.

சாதாரணமாக, இரண்டு நாள் பதவிக்கான தேர்தலில், அதுவும் ஒரே கட்சிக்குள், அதிகாரபீடத்தில் அமர்ந்துள்ள—அமைச்சர் குழுவினரின் செல்வாக்குப் பெற்ற ஒருவருடன் போட்டியிடுவதென்பது எனக்கு மகிழ்ச்சிதரும் விஷயமல்ல; பின் எதற்காக நான் இறுதிவரையில் உறுதியுடன் போட்டியிட்டேன் என்பதுதான் இங்கு கவனிக்கத் தக்க விஷயம்.

> இந்தியா சுதந்திரம் பெற்றால், தமிழகம் சுதந்தர நாடாகும்; இந்தியருக்குச் சுயநிர்ணய உரிமை கிடைத்தால், தமிழ் இனத்துக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடனேயே தமிழர் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டனர். ஆனால், ஆங்கிலேயரை விரட்டிய பின்னர், காங்கிரஸ் மேலிடத்தார், ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய போக்கிலேயே தாங்களும் செல்வதென்ற முடிவுக்கு வந்துவிட்டனர். அசோகரது அறவாழிச் சின்னத்தைக் கொடியில் பொறித்துக்கொண்டு, தமிழர் விஷயத்தில் அசோகரும் செய்ய விரும்பாததைச் செய்யத் துணிந்து விட்டனர். அசோகர் தமது சாம்

ராஜ்யத்தில் சேருமாறு தமிழகத்தைக் கட்டாயப் படுத்தவில்லை.

ஆனால், மேலிடத்தார் எனப்படும் வட இந்தியத் தலைவர்கள், தமிழ் நாட்டிற்குப் 'பிரதேசம்' எனப் பெயரிட்டு, தமிழ் இனத்தவரை 'இந்துக்கள்' என்ற பட்டியலில் சேர்த்து, மத்திய சர்க்காரில் இணைத்துவிட்டனர். தமிழகத்தின் வயது வந்த வாக்காளரின் கருத்தை யறியாது செய்யப் பட்ட இச்செயல், ஜனநாயகமல்ல.

மாட்டை வண்டியில் பூட்டும்போது எசமான் மாட்டின் கருத்தைக் கேட்பதில்லை. அது போன்றே, காங்கிரஸ் மேலிடத்தார் தமிழகத்தின் கருத்தை அறியாமலே, அதை மத்திய சமஷ்டியில் பிணைத்துவிட்டனர். வடஇந்திய முதலாளித்துவ 'நுகத்தடி' தமிழகத்தின் கழுத்தை அழுத்தி வேதனைப்படுத்துகிறது.

இந்தக் கட்டாய அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு தமிழகம் தனிநாடாக வேண்டும்; தமிழர் தனியரசு செலுத்த வேண்டும். அந்த அரசு தனது இஷ்டத்தின்மீது, விரும்பும்போது பிரியும் உரிமையுடன் இந்தியக் கூட்டரசில், அதுவும் சோஷியலிசக் கூட்டரசாக இருக்கும்போது

இணையவேண்டுமென்பதே தமிழரசுக் கழகத்தின் கொள்கை. இதற்கு தமிழ் மக்களிடையே பெரு வாரியான ஆதரவும் இருக்கிறது.

ஆகஸ்டு பதினைந்தாந் தேதிக்குப் பிறகு, மேற்சொன்ன தமிழரசுக் கோரிக்கைக்கு தமிழ்நாட்டு காங்கிரஸ்வாதிக ளிடையே எவ்வளவு ஆதரவிருக்கிறதென்பதை அறிய விரும்பி, சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன். கோவை மாநாடு அத்தகைய சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தது.

தலைவர் தேர்தலில் போட்டியிடாமலேயே யான் எனது கோரிக்கையை நேரே மாநாட்டின் முன்னர் வைத்திருக்க லாம். ஆனால், திரு. காமராஜர் தலைவர் தேர்தலில் நிற்கத் துணிந்ததே எனது போட்டிக்குக் காரணமாய் அமைந்தது. இது தமிழகத்தின் வருங்கால வாழ்வை நிர்ணயிக்கும் காலம். இச்சமயத்தில் அரசாளும் காங்கிரஸின் தலைவராகிய அவர் தமிழகத்தின் உரிமைகளைக் காக்கத் தவறிவிட்டார். அர சியல் நிர்ணய மன்றத்தில் அவர் இடம் பெற்றிருந்தும், தமிழ் இனத்தின் எண்ணத்தை அங்கு எதிரொலி செய்ய வில்லை; தமிழகத்தின் வரலாற்று வழி தமிழரசு காணப் போராடவில்லை. ஏன்? தமிழகத்தின் வரலாறு தெரியாத தாலல்ல, தெரிந்திருக்கலாம். அல்லது, தெரிந்தவர் சொல் லக் கேட்டிருக்கலாம். ஆனால், வடநாட்டுத் தலைமையைத் தட்டிப்பேச தைரியமில்லை. இந்நிலையில், கோவை மாநாட் டின் தலைமைப் பீடத்திலிருந்து 'தமிழன் குரல்' இது வென, மாநாட்டைத் திறக்க வரும் வடநாட்டுத் தலைவர் அறிய ஒலிசெய்ய விரும்பினேன். மற்றும், திரு. காமராஜ

ரைத் தோற்கடிப்பதால் அவரது கடந்தகால தவறுகளி லிருந்து திருந்தச் செய்யலாமென்றும் நம்பினேன். எனவே,

"தலைவர் காமராஜருக்கு விரோதமாக என க்கு வாக்களிப்பதன் மூலம அவரது கடந்தகாலத் தவறுகளை அவருக்கு நினைவூட்டி திருந்தத் தூண் டுங்கள்"

என்று வாக்காளரை வேண்டினேன். ஆனால், வாக்காளர் களில் பெரும்பாலோர் தமிழகத்துக்குச் செய்யவேண்டிய கடமையைவிட தனிப்பட்டவர்கள்மீது கொண்ட விருப்பு வெறுப்புக்கே முதலிடந் தந்தனர். இதனால் காமராஜர் வெற்றி பெறுவது எளிதாயிற்று. ஆகவே, இந்தத் தேர்த லின் முடிவைக்கொண்டு தமிழரசுக் கோரிக்கையை தமிழ் நாட்டுக் காங்கிரஸ்வாதிகள் நிராகரித்துவிட்டனர் என்று சொல்வதற்கில்லை. அப்படிச் சொல்வது காங்கிரஸ்மீது பழிசுமத்துவதாகும்.

மீண்டும், கோவை மாநாட்டில் 'சுதந்தர சோஷலிசத் தமிழ்க் குடியரசு' தீர்மானத்தைப் பிரேரேபித்து, ஐயா யிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகளின் தீர்ப்பைக் கோரப் போகின்றேன். அப்போதுதான் பிரதிநிதிகள் தனிப்பட்ட வர்களை மறந்து, தமிழ் நாட்டின் வருங்காலத்தைப்பற்றி தெளிவாகத் தீர்ப்பளிக்க முடியும்.

இந்த சந்தர்ப்பத்தில், கோவை மாநாட்டுப் பிரதிநிதி களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

பிரதிநிதிகளே! நீங்கள் கோவையில் கொடுக்கவிருக்கும் தீர்ப்பைக் கொண்டுதான் தமிழ்நாட்டுக்கு இனி காங்கிரஸ் வேண்டுமா வேண்டாமா? என்பதைப்பற்றி இன உணர்ச்சியுள்ள காங்கிரஸ் தமிழரும், காங்கிரஸ் அனுதாபமுள்ள தமிழரும் முடிவு செய்யப் போகின்றனர். எனவே, சூழ்நிலைக்கு அடிமையாகாது ஆழ்ந்து சிந்தித்து பின்னர் முடிவு செய்யுங்கள். நீங்கள் செய்யும் முடிவு பிற்காலத் தமிழகம் உங்களைப் பாராட்டுவதாக இருக்கட்டும். கோவை மாநாட்டை இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் நடந்த காஞ்சிபுரம் மாநாடாக ஆகிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

காரைக்காலில் விடுதலை இயக்கம்

இம் மார்தம் 9-ந் தேதி பிரெஞ்சு ஆதிக்கத்திலுள்ள காரைக்காலில், காரைக்கால் அம்மையார் கோயிலின் முன்னர் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. காரைக்கால் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. எஸ். வேங்கடாசலபதி பிள்ளை தலைமை வகித்தார். ஐயாயிரம் மக்களுக்குமேல் திரண்டிருந்தனர்.

கும்பகோணம் திரு. கோவிந்தராசன் பேசிய பின்னர், திரு. ம. பொ. சி. பேசுகையில், பிரெஞ்சுத் தமிழகத்தை விடுவித்து புதிய தமிழகத்தை உருவாக்கி, தமிழரசு காண வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். 'பிரெஞ்சிந்தியாவை இந்திய யூனியனில் சேர்க்க வேண்டும்' என்று கூறுவதைப்பற்றி பேசுகையில், 'பிரெஞ்சுத் தமிழகத்தைத் தமிழகத்தோடு சேர்க்க வேண்டும்' என்று பேசுவதே பொருளுடைய பேச்சாகும் என்றார்.

செயலாளர் நன்றி கூறியபின் கூட்டம் கலைந்தது.

தமிழரசு

சக்திமோஹன்

ஜனநாயகம், வார்த்தை வடிவில் நீண்டுவிட்டது, உலகளாவ; ஆனால் உயிருருவோடு உபயோகப்படுவதெல்லாம் ஒரு சார்புக்கு!

தொழிலாளியைத் தொய்யத் தொய்யத் துவைத்துக் காயப் போட்டுவிட்டு, ஜனநாயகத்தை சந்திசந்தியாகப் பிரித்து, அபூர்வமான அர்த்தங்களை யெல்லாம் அள்ளி, அளக்காமல் கொட்டுகிறது, முதலாளித்வம்!

இயற்கையாகவே அப்ஸரேகைகள் அத்தனையும் பின்னி மின்னுகிற ஜனநாயகத்திற்கு அரிகாரம் பூசி அதிஅழகாக்கிப் பொதுவுக்குக்காட்டி., கரகோஷத்தோடு உள்ளே கூட்டிவந்து, சொந்த வாழ்வுக்காக நெட்டிவாங்குகிறான் முதலாளி!

தேச சமுகத்திற்காக—அபேத் நியதிக்காக, நரம்பையே அறுத்துக் கொடுத்த தொழிலாளியை, ஓடிய ஓடிய அடித்து அடிமையாக்கி கைகட்டி நிற்பாட்டுகிறது, கரங்கூப்பி வரவேற்ற ஜனநாயகம்!

நகரின் ஓரத்தில்—சாக்கடைகள் சங்கமிக்கும் சாரலில்—பிய்ந்தபாயில் உடலைத் துவட்டி யெடுத்துவிட்டு கடமையைச் செய்யவருகிற தொழிலாளியைப் பார்த்து.

நரம்பிற்கொரு நாதம்—மூச்சுக்கொரு பேச்சு—நொடிக்கொரு இடிச்சொல்—நடைக்கொரு உத்திரவைக்கட்டவிழ்த்து முட்டவிடுகிறது, தனியுடமைத்தனம்!

இதெல்லாம் வெள்ளைக்காரன் வைத்துக்காத்த அடிமை இந்தியாவில் அல்ல: நமது உழைப்பைப் பறித்து உருவாகிய சுதந்திர இந்தியாவில்!

விடுதலைக்காக பலபோராட்டங்களை நடத்தி முடித்த இந்தியா, அலுப்புத் தீர்த்துக் கொள்ளவேண்டிய வேளையில், மற்றொரு விசாலமான புரட்சியோடு நேரடியாக மோதவேண்டியதிருக்கிறது, வாழ்க்கைக்காக.

கடந்துபோன விடுதலைபோராட்டங்களைவிட, கடக்கவேண்டிய வாழ்க்கைப் புரட்சி கடுமையானதாயினும், அதன் வெற்றியில்தான், விடுதலைப் போராட்டங்களின் தத்துவம் வரியேற வேண்டும் !

இருப்புக்கு மேம்பட்ட தேவை, இந்தியாவின் புதிய சந்திப்பல்ல. தேவைக்குச் செலவானதுபோக, அவசரத்திற்காக எதையேனும் மீத்து வைப்போமென்ற சங்கதியே இந்திய சமுதாயத்திற்கு இதுவரை உடன்பட்டதில்லை.

இந்திய விடுதலைக்கு அவசியம் கொடுத்து அமுலுக்குக் கொண்டுவந்த முதலாளித்வம், தொழிலாளியின் தோளில் ஏறி கடுமைகளைக் கடந்து குறித்த விடுதலையை ஒட்டியவுடன் தூக்கிவந்த தொழிலாளிக்கு புல்லுப் போடக்கூட யோசிக்கிறது ; யோசித்தபிறகு அள்ளிப் போடாமல் எண்ணிப்போடுகிறது, புல்லை.

இந்த மேடையில் நின்றுகொண்டு ஒவ்வொருவரும் கவனத்தை வேலை வாங்கவேண்டும், (இந்தக் கட்டத்தில்) மற்றொரு புரட்சி வாழ்க்கைக்காக நடக்காமல் தீருமாவென்பதைத் தெரிய !

எவ்வளவு லாகவமாக நிலைமையைச் சமாளிக்க முயன்றாலும், மற்றொரு புரட்சியின் ஜெனனத்தை சிலமணி நேரம் பிந்த வைக்கலாமே தவிர, பிறக்கவிடாமல் தடுத்துவிட முடியவே முடியாது ; அவ்வளவு ஆழம்வரை வேர் விரித்திருக்கிறது, முதலாளித்வம்.

இந்திய சமுதாயவாழ்வின் அடியைப் பின்னிக் கொண்டிருக்கிற முதலாளித்வத்திற்கு முன்னே, தொழிலாளியின் வாழ்வு பரண்கட்டி உயர முடியாதென்ற தீர்மானத்தின் தூரில்தான் அடுத்த புரட்சி தளிர்கூட்டி இருக்கிறது!

தேச சுதந்திரத்திற்கும், தொழிலாளியின் வாழ்விற்கும் மத்தியிலே பாலம்போட முடியாத பிளவை ஏற்படுத்திய தனிவுடைமையினரின் நயத்தைக் கட்டியணைத்து முத்தமிடுகிறது, அதிகாரம்! இந்த அதிகாரத்தின் எந்தப் பாகத்திலிருந்தும், தொழிலாளியின் வாழ்வினிமை பிதுங்காதென்ற நம்பிக்கையின் நடுவிலேதான், மறுபுரட்சி முகங்காட்டுகிறது!

முதலாளித்வமும், அதிகாரமும் ஒன்றுகூடுவது எவ்வளவு லகுவாகச் சம்பவிக்கிறதோ அவ்வளவு லகுவாகப் புரட்சியும் சம்பவித்துவிட முடிந்த அநுகுணத்தை உதவுகிறது, அந்தக்கூடல்? எனவே முதலாளித்வமும் அதிகாரமும் கைகோர்த்துக் கொள்ளத்தான் செய்யும்; அதன்போது நசுங்கிக் கசங்குகிற தொழிலாளியும், ஒரு தீவிரப்புரட்சியைத் திறந்துவிடத்தான் செய்வான்; இதில் எதிர்பாராதென்று சப்பைக் கட்டுகட்ட ஒன்றுமே இல்லை. வாழ்வை வளப்படுத்துவதாக முதலாளி, அதிகாரத்தோடு அளவளாவுகிறான்; அதே வாழ்வை அநுபவிப்பதற்காக புரட்சியைச் சிநேகிக்கிறான் தொழிலாளி! இரண்டும் அதனதன் வழிக்கு சரியான பிரயாணிகளே.

• •

எப்படியோ இந்தியா விடுபட்டு விட்டது. இனி எடுபடவேண்டிய சிக்கல் அதிகம். அதில் முக்கியமாய் முதலில் தீரவேண்டியது தொழிலாளர் பிரச்னை. இதற்கு எந்தப் பரிகரிப்பும் தராமல், முதலாளியையும் தொழிலாளியையும் நியதியைக்கையாளும்படி புத்தி சொல்கிறது இந்தியயூனியன். தொழிலாளியைச் சுரண்டுகிற முதலாளியிடம் நியாயத்திற்கு மதிப்பேது? என்பதைத் தேய்த்துப் பாராமல், வெறும் புத்தியைமட்டும் சொல்லால் காய்ச்சிக் கொடுப்பதில், நடக்க

முடிந்த நன்மை ஒன்றுமே இல்லை யென்ற தீர்மானத்தின் எல்லையிலே நிற்கிற தொழிலாளிக்கு, புரட்சி காட்சி கொடுக்கிறது. அதை அணுகாதவரை, அவனுடைய வாழ்வில் பசுமை கவிவதென்பது வெறுங்கானல்தான்.

வாழவேண்டிய தேவை விரிந்துவிட்ட தொழிலாளி, சங்கடத்தையும் சாவையும் மடியில்கட்டிவிடும் புரட்சிக்கு உடன்படச் சம்மதிக்கத் தயங்குவதில்லை. சுரண்டுகிற கும்பலின் தொல்லை மென்னியை நெறிக்கையில், புரட்சியின் ஆரம்பக் கடினத்தையும், அந்திச்சுகத்தையும் ஏககாலத்தில் காண முடிகிறது. அதன்போதுதான் தொழிலாளி, தன்னுடைய அடுத்த புரட்சியின் வெற்றிக்குப் பட்டியல் தயாரிக்கிற அளவிற்குப் பக்குவப்படுகிறான்.

இந்தியாவின் தொழிலாளவர்க்கம், கடுமையின் எல்லையைக் கண்டு விட்டது; அதற்கு, புரட்சியின் சந்திப்புகள் புதிதல்ல. ஆனால் ஐக்யப்பாட்டில் மட்டும் பக்குவம் போதாது. புரட்சியில் இறங்குவதற்கு முன் தொழிலாளர் ஐக்யப்பட்டாக வேண்டும். இந்த ஐக்யம் அகில இந்திய ரீதியில் அமைவது அதி விசேஷம். ஆனால் இந்தியாவின் சூழ்நிலை, அகில இந்தியத் தொழிலாளர் ஐக்யத்தை ஏகோபிக்கச் செய்தபிறகு தேவைக்குரிய புரட்சியில் இறங்குவதற்கு இடம் தரவில்லை. இன்றைய அமைதியின்மையில் அகில இந்தியத் தொழிலாளி வர்க்கத்தை ஐக்யப்படுத்துவதற்குள், முதலாளிகள், இன்னும் பல புரட்சிகளை எதிர்த்துச் சமாளிக்கும் அளவிற்குத் தயாராகி விடுவார்கள். எனவே முதலில் மொழிவாரி மாகாணத் தொழிலாளர்கள் ஒன்றுபடவேண்டும்; ஒன்றுபடுவதற்கு, சோஷலிஸத்தின் அடிப்படையில் ஜனநாயகத்தை எழுப்பத் திட்டங்கட்டிய ஒருகழகத்தை அணுகவேண்டும்; கழகத்தின் சார்பில் நேரான பாதையில் புரட்சியை நடத்தினால், சமதர்மத்தைச் சந்தித்து, சமுதாயநலனை அதனிடம் நம்பி ஒப்புவித்துவிட்டு புரட்சிக்கு ஓய்வு கொடுக்கலாம்!

பாஷாவாரி மாகாணப் பிரிவினை வேண்டுமென்கிற விஷயத்தில் இந்திய மாகாணங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு அபிப்பிராயத்தில் இல்லை. அதிலும் எதிர்பார்த்த இந்திய சுதந்திரம், எதிர்பாராத விபரீதங்களைக் கொண்டுவந்து நிறுத்தி விட்டதால், ஒரே யூனியனின் கீழ் பாஷாவாரி மாகாணப் பிரிவினை வேண்டுமென்ற அபிப்பிராயம் அழுத்தமாகி, அது காரியாம்சையிலும் கால் வைத்துவிட்டது. இந்தியாவின் ஆதித்திட்டப்படி இந்தியப் பரப்பைக் கூறு போடுவதென்பது முரணானதேயாயினும், ஆதித்திட்டத்தின் பாதிப்பாதையில் பிரிவினை உணர்ச்சி எதிர்ப்பட்டு, அது ஆதித்திட்டத்தின் அம்ஸத்தையே ஒதுக்கி வைத்துவிட்டதால், பிரிவினையைத் துரிதப்படுத்துவது துண்டாடும் நோக்கமாகாது; வாழ்வின் அம்ஸமாகவே அதை ஆக்கிக்கொள்ள, போதிய உரிமையுண்டு. சுரண்டுகிற வர்க்கத்தை ஒழித்து ஏகஇந்தியாவைப் படைக்க வேண்டுமென்ற காங்கிரஸே, அதிகாரத்திற்கு வந்ததும் ஏகஇந்தியப் பாதையை அடைத்து விட்டு புதிய பாதையை திறந்துகொண்டது. இது அதன் குறையல்ல. இந்திய சமுதாய அமைப்பின் லட்சணம் அப்படித்தானிருக்கிறது. அதிகாரம் வாங்கிய காங்கிரஸ், சோஷலிஸத்தின் அடிப்படையில் சமுதாயத்தை மாற்றி அமைத்திருந்தால், அதன் லட்சியத்தில் வடுவிழ முடிந்திராது. எதையோ குறித்து முன்னேறிய காங்கிரஸ், எதையோ எட்டிவிட்டது. அதனால் சமுதாயவாழ்வை வற்றவிடாமல் காக்கமுடியவில்லை—முடியாது. இந்த முடிவில்தான் பாஷாவாரி மாகாணப் பிரிவினைத்திட்டம் உதயமாகிறது! இந்தப் பிரிவினையில்தான் அந்தந்தப் பகுதிப்பண்பாட்டிற்கு உடந்தையான அதிகாரம் அமைவதோடு, சரியான சோஷலிஸ தத்துவப்படி அதிகாரத்தை மக்கள் கைக்கு மாற்றிவிட்டு வாழ்க்கையை வாடவிடாமல் வளர்க்கமுடியும்!

எனவே தமிழரசுக் கழகம் கேட்கிறது தமிழ்மாகாணம் பிரிபட வேண்டுமென்று; ஆனால் ஜின்னாவின் பாணியிலல்ல; சோஷலிஸ ரீதியில், தொழிலாள—முதலாளிவர்க்க ஏற்றத்

தாழ்வை நோக்க! இதைக் குற்றமென்க முடியாது—எந்த ரீதியாகவும்.

நமக்கு (தமிழர்களுக்கு) வேண்டியது, மானத்தை கைமாற்றுக்கொடாத வாழ்வு; வாழ்வை அமைப்பதற்கு அபேத அரசு வேண்டும்; அந்த அரசை நிறுத்துவதற்கு ஒரு இயக்கம் தேவை; அந்த இயக்கம் இதோ என்கிறது தமிழரசுக் கழகம்! இந்தக் கழகத்தைப் பற்றி, பலர் பலவித அபிப்பிராயங்களைக் கக்குகின்றனர். அவைகளை வைத்தே கழகத்தின் தராதரத்தை மதிப்பிடுவது பிசகு. கழகத்தின் ஒவ்வொரு திட்டத்திற்கும் ருசியுள்ள கணுக்கள் பல இருக்கின்றன. அவைகளை கணுக் கணுவாக, சரிந்துவிடாத அறிவுப் பாட்டோடு சுவைபார்த்துச் சொல்ல ஒவ்வொரு தமிழனும் பாத்யதையுடைவன். தனியுடைமைத்தனம் ஊடாடாத திட்டமும்; தொழிலாளர் கையில் அதிகாரத்தை மாற்றிக்கொடுக்கும் அம்ஸமும் தமிழரசுக் கழகத்தில் உண்டா என்பதை அலசிப் பார்த்து அபிப்பிராயம் கொடுப்பதோடு விலகிவிடாமல் அதோடு இணையவேண்டியதும் தமிழனின் கடமை.

அகில இந்தியாவையும் ஓரே சோஷலிஸ அஸ்திவாரத்தில் அமைப்பதற்கு, தமிழரசுக் கழகம் வேறுபடவில்லை. பாஷாவாரி மாகாண சோஷலிஸக் குடியரசின் வழியாக அகில இந்திய சோஷலிஸக் குடியரசை அடைவதேஅதன் தூர்கொள்கை சோஷலிசத்தில் ஓரளவு தேறியிருக்கிற சோவியத் ரஷ்யா, பாஷாவாரிப் பகுதி உரிமைக்கு உடன்பட்டேதான் அகில ரஷ்யப் பொதுவுடைமை நிர்வாகத்தை நிர்மாணித்தது.

இந்தியப் பாங்கின்படி ஏக இந்தியா எளிதல்லவென்பதுஅனுபவ ரீதியாகிவிட்டது. எல்லாத் தொழிலாளர்களையும் ஐக்யப்படுத்தி அரசுரிமையைக் கைப்பற்றி விடுவதென்பது அவசரத் தேவையை அடக்கிப் போடும் விஷயம்.

எனவே தமிழ்த் தொழிலாளர்கள், தமிழ்க் குடியரசைக்கொண்டுவர உண்டாகி இருக்கிற தமி ழரசுக் கழகத்தை ஸ்திரப்படுத்தி தீவிரமாக்கவேண்டும்.

தமிழரசிலே, தொழிலாளர் வாழ்க்கைத்தரம், தனி வுடைமையிடம் பிடிபடாது என்பது திர்க்கமான தீர்மானம்! தொழிலாளர் கையில் அதிகாரம் மாறிய பிறகு அற்புத வாழ்வு முழுமையுடன் சோபிக்க முடியுமென்ற நம்பிக்கை ஒவ்வொருவரிடமும் ஊறவேண்டும்! நம்பிக்கை பலத்தோடு தமிழகத் தொழிலாளர் ஐக்யப்பட்டு ஆக்கவேலையில் இறங்க, ஏற்கனவே உருவாகியுள்ள முன்னணி ஸ்தாபனமாகிய தமிழரசு இயக்கத்தில் இணையுங்கள்! அடுத்து உடனடியாகத் தீரவேண்டிய தொழிலாளர் நெருக்கடியைத் தவிர்க்க, தமி ழரசு ஒன்றுலேயேதான் முடியும்!

பொங்கலன்று, தமிழன் குரல்

தைபிறக்க வழி பிறக்கும் என்பர் தமிழ் மக்கள்
தை பிறந்தும் வழிபிறந்த தன்மையதைக் காணோம்
கை விரித்துக் கலங்குகின்றார் கழனி உழவோர்கள்
கவலையது அனுத்துணையும் கருகியதா யில்லை
மையிட்டு நல்லாடை உடுத்தி மலர் சூடி
மகிழ்வோர்கள் ஓர் சிலரே மகிதலத்தில் கண்டோம்
ஐயகோ வென்றலறும் ஏழைகளின் ஓலம்
அது மறைக்கப் பொங்கலோ பொங்கலெனும் கோலம்.

கூ. ப. நடராஜன்.

மொழிமோகம்

ஆ. ஷண்முகசுந்தரம்

நதிக்கரையில் பொதிமணலில் கதிரெதிரே
நானமர்ந்தேன்; அயர்வுற்றேன் பலவாறெண்ணி!
"மதிமோசம் போனாய்நீ தமிழ்தொட்டு!
மாநிலத்தில் அமிழ்தென்பார் அத்தமிழை!
இதுகாறும் தமிழ்கற்றாய் என்னபயன்!
இவ்வளவில் ஆங்கிலத்தைக் கற்றிருந்தால்
பதிகளுக்கோர் திலகம்போல் இலங்குவாயே!
பாவிநீ" என்றறைந்தான் அன்னொருவன்!

"ஆங்கிலத்தை ஏன்விட்டாய்? அதைக்கற்றால்
அகிலமெலாம் திரிந்துவர துணைசெய்யும்;
ஈங்குள்ள உயர்மன்றில் சேர்ந்துநிதம்
இருந்துபணி புரிந்துநிதி திரட்டிடலாம்;
பாங்கான தமிழென்றால் பணம்வருமோ?
பக்குவமாய் ஆங்கிலமும் அதிற்கலந்தால்
தாங்குவரே எல்லோரும் கைகுலுக்கி!
தம்பிநீ தமிழைஇனி தொட்டிடாதே!"

என்றுசொல்லி ஏதேதோ ஏசிவிட்டார்
என்றந்தை; பேதைஅவர். என்மனைவியோ
அன்றலர்ந்த மலர்முகத்தாள் அறைக்குள்ளே
ஆற்றாமல் இதைக்கேட்டு மனங்குவிந்தாள்!
நன்றிதரும் தன்மகவின் அழுகுரலை
நானறிய அரமடக்க முற்பட்டுச்
'சென்றிடுவீர் எட்டுதிக்கும்' என்றபாட்டை
செல்விழிதன் தாலாட்டில் இசைத்திட்டாள்!

அக்கணமே நான்பிரிந்தேன் மனை நீங்கி.
ஆங்கிலத்தை எல்லோரும் உயர்வென்றால்
எக்காலம் தமிழ்நாடு உயர்வெய்தும்?
ஏனிந்த நல்லெண்ணம் வரவில்லை?
சக்கரம்போல் சுழலும்சுக துக்கவாழ்வில்
சாந்தனையும் சஞ்சலத்திற் சிக்கலாமோ?
மக்களெலாம் இதைஎண்ணி ஒன்றுபட்டால்
மாண்டிடாதோ ஆங்கிலமும் இந்தநாட்டில்!

தாய்மொழியாம் தமிழ்மொழியில் பேசுகையில்
தமிழுடனே ஆங்கிலமும் கலந்துகொள்ளும்
பேய்களிங்கே ஏராளம். என்சொல்வேன்!
பெற்றதாயை நினைப்பதில்லை அப்பேய்கள்!
நாய்கூட தன்பேச்சின் மத்தியிலே
நரிமொழியைக் கலப்பதில்லை. கண்டீர்சொல்?
காய்விட்டுத் தீங்கனியை அன்றோநாம்
கொய்யவேண்டும்! கன்னித்தமிழ் கனிகொய்வீர்!

ஆறியம்போல் அழிந்துபடா கன்னித்தமிழ்
அப்புவிமேல் ஆங்கிலம்போல் பரவாதோ?
பாரெங்கும் இம்மொழியைத் தமிழ்நாட்டார்
பரவும்வகைச் செய்திட்டால் பிழையாமோ?
ஊரெங்கும் நாடெங்கும் இதைச்சொல்ல
உள்ளத்தில் உறுதிகொள்வீர் அன்றேநம்
சீரார்ந்த தமிழ்நாட்டின் இலாஞ்சினையைச்
சித்திரத்தில் தீட்டிடலாம். இளம்பிவாரீர்!

எத்திக்கிற் சென்றாலும் தமிழகத்தின்
ஏற்றத்தை எடுத்துரைக்க அஞ்சாதீர்!
தித்திக்குஞ் செந்தமிழை எட்டிஎன்பார்
தீநாவை இருதுண்டாய் அறுத்திடுவீர்!
இத்தமிழில் இல்லாத உயர்கலைகள்
எங்கேனும் தென்பட்டால் விட்டிடாதீர்!
பத்திரமாய் அதைப்பின்னர் தமிழ்த்தாயின்
பாதமலர் சேர்த்துவிட்டால் தமிழிலங்கும்!

மணற்பாயில் நதியருகே அமர்ந்தவுடன்
மக்களின்முன் இவைசொல்லச் சிந்தித்தேன்
பிணம்என்ன நினைத்தென்னை அப்போதென்
பின்புறத்தில் வந்தவொரு கட்டெறும்போ
தணல்போன்ற தன்கொடுக்கால் கொட்டிடவே
தாறுமாறாய்ப் பறந்தனகாண் சிந்தனைகள்!
கணமேனும் ஓயாத அவ்வெறும்பைக்
கண்டுடனே நசுக்காமல் விடலாமோ!

தமிழ்நாட்டின் புரட்சியமைப்புக்கு
வழிகோலுகிறது.

அறிஞர் ம. பொ. சி, கோ. மோ. ஜனார்த்தனம்
இன்னும் பலர் எழுதுகின்றனர்.

"தாய் நாடு"

சிறந்த மாதப் பத்திரிகை

●

தனிப்பிரதி அணா 4
வருடசந்தா ரூ. 3

●

ஏஜண்டுகள் தேவை

நிர்வாகி: தாய் நாடு: புதுக்கோட்டை.

புதுக்கோட்டை
தனியரசாக இருக்க வேண்டுமா?

க. நாராயணன்

கேள்வி சிக்கலானது தான். பிரதேச ஒற்றுமை, நாட்டு ஒற்றுமை தேச ஒற்றுமை, உலக ஒற்றுமை என்று பல பிரிவுக் கட்சிகள் கோஷமிட்டு வரும் இந்நாளில் புதுக்கோட்டை தனியரசாகவேற்றாரின் உதவியை எதிர்பார்க்காமல் தானே இயங்க முடியுமா? அம்மாதிரியே இயங்க முடிந்தாலும் தமிழகத்தின் நடுவிலே தமிழர்களிடமிருந்து சட்டம், நீதி, நிர்வாகம் எல்லாவற்றிலும் வேற்றுமையுடன் புதுக்கோட்டைத் தமிழர்கள் வாழவேண்டியது அவசியமா? வாழத்தான் முடியுமா?

மேற்கண்ட கேள்விகளுக்கு விடை தெரிந்துகொள்ளு முன்பு புதுக்கோட்டையைப் பற்றி ஓரளவு உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுமல்லவா? இதோ படியுங்கள்.

புதுக்கோட்டை சமஸ்தானம் ராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்கிடையே 1,178 சதுர மைல்கள் உள்ள ஒரு குறுகிய நிலப்பரப்பு. இதனுடைய அதிக நீளம் கிழக்கு மேற்கில் 52 மைல்களும் தெற்கு வடக்கில் 41 மைல்களும் உள்ளது. அதாவது, சென்னை மாகாணத்தின் நிலப்பரப்பில் 24 சத விகிதமுள்ள பிரதேசமே இது.

சமஸ்தானத்தில் சுமார் ஐந்து லட்சம் மக்கள் வசிக்கின்றனர். புதுக்கோட்டை நகரத்தைத் தவிர மற்ற எல்லாம் கிராமங்களே. அவற்றின் தொகை 1931ல் 435. 1931 கணக்குப்படி தமிழர்கள் 3,87,740-ம், தெலுங்கர்கள் 12,250, இதர மொழியினர் மிகச் சிலராகவும் வாழுகின்றனர். சமஸ்தானத்திலுள்ள முஸ்லிம்கள் 15,194. இதில், 13,157 பேர் தமி

யையே தாய் மொழியாக்கொண்டவர்கள். கிறிஸ்துவர்களின் தொகை 17,960 ஆகும்.

படித்தவர்களின் தொகை ஆண்களில் 20 சத விகிதமும் பெண்களில் 2 சத விகிதமுமேயாகும்.

சமஸ்தானத்தின் மொத்தப் பிரதேசத்தில் சுமார் 12 சத விகிதம் ஏக்கரில் நெல் விளைகிறது. ஆற்றுப்பாசனம் இங்கு கிடையாது. ஏரி, குளங்களில் நீரைத் தேக்கி வைத்து விவசாயம் நடக்கிறது. மழையில்லாவிட்டால் விவசாயமே இல்லை. சுமார் இரண்டாண்டுகளுக்குள் சில தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் இன்னும் பூரண வளர்ச்சியடையவில்லை. சமஸ்தானத்திலிருந்து விறகும், நிலக்கடலையும் ஏற்றுமதியாகின்றன.

தற்சமயம் புதுக்கோட்டையை "ஹிஸ் ஹைனஸ் ராஜ ராஜகோபாலத் தொண்டமான் பஹதூர்" ஆண்டுவருகிறார். இவர் புதுக்கோட்டையை ஆண்டு வரும் ஒன்பதாவது மன்னர்.

சமஸ்தானத்தின் மொத்த வருமானம் 46-47ல் ரூ. 39,22,527
" மொத்தச் செலவு " " ரூ. 30,17,899

இவற்றில் நிலவரியின் மூலம் 10 லட்சமும், கலால் மூலம் 11 லட்சமும் ஸ்டாம்பு, வட்டி வகையில் 6 லட்சமும் இதர வகைகளில் மீதியும் வருமானம் வருகிறது. செலவு தொகையில் மன்னருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் 3 லட்சமும், திவான், கவுன்சிலர்களுக்கு 60 ஆயிரமும், மற்ற நீதி, நிர்வாக வகைகளில் பாக்கியும் செலவாகிறது.

இப்பொழுது முதலிலே கேட்கப்பட்ட கேள்விகளைக் கவனிப்போம். இந்த சமஸ்தானத்திலே மன்னர் ஒரு பக்கம் இருக்க, திவான், இரண்டு கவுன்ஸிலர்கள், அப்பீல்

கோர்ட்டு, அதற்கென நீதிபதி இவையெல்லாம் வேண்டுமா? அதற்கென ஆகும் நிர்வாகச் செலவுகள் எவ்வளவு? சென்னை அரசாங்கம் மது ஒழிப்பை மாகாணமெங்கும் அமுலுக்குக் கொண்டுவரப்போகிறது. அப்படி வந்தால் புதுக்கோட்டையிலும் உடனடியாக அதை அமுலுக்கு கொண்டுவரவேண்டும். அப்படி அமுலுக்கு வந்தால் அதனால் கலால் வருமானம் 11 லட்ச ரூபாய் குறைந்து விடும். இதை நிர்வாகத்தில் எப்படிச் சரிக்கட்டுவது ?

சமஸ்தானம் உணவுப்பொருள் விஷயத்தில் ஒரு பற்றுக் குறைப் பிரதேசம். எந்தக் காலத்திலும் தஞ்சாவூர் ஜில்லாவையே எதிர்பார்க்கும் பிரதேசம். வருமானமும் குறைந்து, உணவுப்பொருளுக்கும் மற்ற அரசாங்கத்தை எதிர்பார்த்து எத்தனை நாட்கள் தான் அரசாங்கம் நடக்கும். இவ்வளவு சிறிய சமஸ்தானத்திற்கு அதிகச் சம்பளங்களில் நிர்வாகிகள் தேவையா ? வேண்டவே வேண்டாம் என்பதே என் அபிப்பிராயம்.

மன்னருடைய பிரகடனப்படி அதிவிரைவிலே புதுக்கோட்டை அரசாங்கத்திற்கு, அரசியலை வகுக்க வயது வந்தோர் ஓட்டுரிமைப்படி 60 அங்கத்தினர்கள் கூடி அரசியலை வகுக்கப் போகிறார்கள். அவர்கள் தான் எதிர்காலத்தையும் மனதில் சிந்தித்து அரசியலை வகுக்க வேண்டும்.

எதிர்காலத்திலே இந்தியா பல யூனிட்டுகளாகப் பிரிந்து ஸ்தல சுய ஆட்சி நடத்தும் என்றும், ராணுவம் பாதுகாப்பு, வெளிநாட்டுறவு, போக்குவரத்து முதலியவற்றை மத்திய அரசாங்கம் நிர்வகிக்கும் என்றும் சொல்லுகிறார்கள். அப்படி நடைபெறுமாயின், புதுக்கோட்டை அரசாங்கம் தனித்தியங்குமா என்பதைப் பரிசீலனை செய்வதற்கும், இதே போன்ற பல யூனிட்டுகள் தனித்தியங்க தமிழ் நாட்டிற்கு, புதுக்கோட்டையை சோதனைப் பிரதேசமாகவும் இதை நடத்திப் பார்க்கலாம்.

கலால் வருமானம் குறைந்து போனாலும் மொத்த வருமானம் 39 லட்சத்தில், கலால் வருமானம் 11 லட்சம் நீக்கி 28 லட்சம்; செலவு 30 லட்சம் துண்டு விழும் 2 லட்சத்திற்கு நாட்டில் சில நிர்வாகச் செலவுகளைக் குறைத்து, விற்பனை வரி, அமிதலாப வரி முதலியவற்றை விதிப்பதன் மூலம் தற்போதைய நஷ்டத்தை ஈடு செய்யலாம். எதிர்காலத்திலே தேசத்தில் பொதுவுடைமையை அமுலுக்குக் கொண்டுவரும் பொழுது புதுக்கோட்டை சமஸ்தானம் இன்னும் சிறந்த முறையிலே மற்ற யூனிட்டுகளுக்கு எடுத்துக் காட்டாக நடந்துகொள்ள முடியும்.

இன்று மன்னருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் கொடுக்கப்படும் 3 லட்சமும் மீதப்படும். புதுக்கோட்டைக்கு இரண்டு மந்திரிகள் மட்டும் ரூபாய் 500 சம்பளத்திற்குள் இருந்தாலே போதுமானது. எல்லா நிர்வாகங்களையும் உடனுக்குடன் கவனித்து நேர்மையான வழியில் அரசாங்கத்தை நடத்துவதற்கேற்ற முறையிலே சமஸ்தானமும் சிறிய பிரதேசமாக இருப்பது ஏதுவாக இருக்கிறது. எந்தத் திட்டத்தையும் அமுலுக்குக் கொண்டுவந்து நடத்திப் பார்க்கலாம். விவசாயிகளின் நிலவரியைப் போக்கி, அதற்குப் பதிலாக, பெரிய தொழிற் ஸ்தாபனங்களையும், போக்குவரத்தையும் அரசாங்கமே எடுத்து நடத்தலாம். சமஸ்தானம் முழுவதிலும் கல்வியைப் பரப்பி ஐந்து ஆண்டுகளுக்குள் 100 சதவிகிதம் கல்வி கற்றவர்களாக ஆக்கிவிடலாம். சிறந்த தொழிற் திட்டங்களை வகுக்கலாம். நிலங்களை இன்றுள்ள முறையிலிருந்து மாற்றி, பெரிய பெரிய நிலங்களாக மாற்றி கூட்டு விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தலாம். சோம்பேறிகளுக்கு நிலங் கொடுக்காமல் விவசாயம் செய்பவருக்கு மட்டுமே சொந்தமாக்கலாம். இம்மாதிரி பல திட்டங்களை வகுத்து நடத்திப்பார்க்க புதுக்கோட்டை சமஸ்தானத்தில் வசதிகளுண்டு.

காவேரியிலிருந்து சமஸ்தானத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு தீர்மானித்தபடி கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு

வரலாம். இதனுல் வானத்தை எதிர்ப்பார்த்து விவசாயம் செய்வது குறையும்; விவசாய நிலைமையும் சீர்படும். இவற்றை எல்லாம் வரப்போகும் அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்கள் கவனிக்கவேண்டும். இம்மாதிரி சிறந்த முறையிலே அரசாங்கம் திட்டம் வகுத்து அரசியலை நடத்த முடியாதென்றல், பேசாமல் தமிழகத்துடன் சேர்த்து விடுவதே புதுக்கோட்டை மக்களுக்குச் செய்யும் பேருதவியாகும்.

இன்றைய நிலையில் சமஸ்தானம் தனித்தியங்க முடியும். அதை மக்கள் தலைவர்கள் கைப்பற்றி நடத்தாவிட்டால் மக்கள் அனைவரும் இதைத் தமிழகத்துடன் சேர்த்து விடும்படி கோரிக்கை விடுவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

இந்தச் சிறு சமஸ்தானத்திலும் கூட வெளியே உள்ள கட்சிகள் சார்பிலும், அந்த மக்களின் நடவடிக்கைகளுக்கேற்ப பல கட்சிகள் தோன்றி மக்களை நாலா பக்கங்களிலும் சிதறும்படிசெய்து வருகின்றனர். இந்தியா போன்ற பெரிய தேசங்களுக்கு எத்தனை கட்சிகள் இருந்தாலும் அரசாங்கத்திற்கு பாதகம் அவ்வளவாக ஏற்பட்டுவிடாது. ஆனுல் புதுக்கோட்டையில் வெளியிலிருந்து வரும் பல கட்சித் தலைவர்களும் அவரவர்களுடைய கட்சிக்கருத்துக்களுக்கு ஏற்ற முறையில் மக்களை சுலபமாகத் திருப்பிவிட முடியும். இதனுல் ஒரே ஆட்சி நிலைத்திருக்கவும் முடியாது. ஒரே மாதிரியான திட்டங்களை அமுல் நடத்துவதும் கஷ்டம். சமஸ்தானம் இந்திய யூனியனில் இணைந்திருப்பதால் இதைத் தடுப்பது நடவாத காரியம். இதையும் மக்கள் ஓரளவு உணர்ந்து கொள்ள வேண்டும்.

மொழி வாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என்ற திட்டம் மத்திய அரசியல் நிர்ணய சபையால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது அமுலுக்கு வருவதற்கு முன்பே ஒரு தனித்தமிழ் அரசாங்கமாக புதுக்கோட்டையை எல்லா அதிகாரங்களுடனும் நடத்திப்பார்க்கலாம். மொழி

வாரியாக மாகாணங்கள் பிரிந்ததும் புதுக்கோட்டை தமிழ் மாகாணத்துடன் எல்லாத் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளலாம். அதைவிட்டு டெல்லியுடன் தொடர்பு வைத்துக்கொண்டு சின்னஞ்சிறு விஷயங்களுக்கெல்லாம் டெல்லியை எதிர்பார்த்தால் நிர்வாகத்தில் சிக்கல் தோன்றும். இவற்றையெல்லாம் வரப்போகும் அரசியல் நிர்ணய மன்ற அங்கத்தினர்கள் ஆராய்ந்து, தகுந்த முறையில் அரசியலை வகுக்க வேண்டும். இல்லையேல் புதுக்கோட்டை, சென்னை மாகாணத்துடன் சேர்ந்து விடும் என்று மீண்டும் எச்சரிக்க விரும்புகிறேன்.

பத்திரிகைகளில் முன்னணியில் நிற்பது

"முன்னணி" ● மாதப் பத்திரிகை

ஆசிரியர்கள் : பா. காண்டீபன், இளந்தத்தன்.

ஒவ்வொரு இதழிலும் :

- ஒருமுழு நாவல்
- அரசியல் பிரமுகர்களின் கட்டுரை
- விஞ்ஞானியின் விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரை
- பொருளாதாரக் கட்டுரை
- சினிமா சம்பந்தமான கட்டுரை.

தனிப்பிரதி விலை அணா எட்டு — ஆண்டு சந்தா ரூபாய் ஆறு

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு :—

நிர்வாகி, முன்னணிப் பதிப்பகம்

143, வடக்கு மாசி வீதி, மதுரை.

தமிழரசுப் பிரசாரம்

சேலம்

சேலம் தமிழரசுக் கழகத்தின் சார்பாக விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் மாபெருங் கூட்டம் நடை பெற்றது. சுமார் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களும் ஊழியர்களும் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது. செயலாளர் திரு. முத்துசாமி பிரேரேபிக்க, திரு. சுப்பிரமணியம், எம். எல். ஏ. தலைமை வகித்தார். தலைவர் தமது முகவுரையில் தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை ஆதரித்துப் பேசியதோடு, புதிய தமிழகத்தை—சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசை அமைக்க எல்லாத்தமிழர்களும் ஒன்று சேரவேண்டும் என்று கூறினர்.

திரு. கொ. மொ. ஜனார்த்தனம் பேசுகையில், தமிழரசுக் கிளர்ச்சியிலே இளைஞர்கள் தலைமை தாங்க வேண்டுமென்றும், ஜாதிமதப் பூசல்களை ஒழித்து, மூடநம்பிக்கையை முறியடித்து விஞ்ஞான வழியில் பொருளாதார சமத்துவம் உள்ள தமிழ்க் குடியரசை நிறுவ வேண்டுமென்றும் கூறினர்.

திரு. ம. பொ. சி. பேசுகையில், வெற்றி தமிழகத்தின் தலைவாயிற் கதவைத் தட்டுகிறதென்றும், இச்சமயத்தில் தமிழர் வேற்றுமைகளை விட்டொழிக்க வேண்டுமென்றும், கூறியதோடு, தமிழர்க்குரிய நிலப்பரப்பில் ஓர் அங்குலத்தையும் திருப்பிக் கொடுக்க முடியாதென்றும், புதிய தமிழகம் உருவாகும் அதே கணத்தில் சுரண்டல் அடியோடு ஒழிந்த சோஷலிசத் தமிழ்க் குடியரசை அமைக்க வேண்டுமென்றும் கூறினர். கூட்டத்தில் இருந்த பலர் விடுத்த கேள்விகளுக்கும் தக்க பதிலளித்தார். சேலம் மாவட்டத் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. பச்சையப்பன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

திருப்பத்தூர் நகர சபையில் வ. உ. சி. படத்திறப்பு

வடஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் நகர சபையில் வ. உ. சி. படத்தை இம்மாதம் 4-ந் தேதி யன்று மாலை திரு ம. பொ. சி. திறந்து வைத்தார். மாலை 6-30 மணிக்கு ம. பொ. சி. அவர்கள் திருப்பத்தூர் வந்து சேர்ந்தார். பஸ் நிலையத்தில் நகர சபை கமிஷனர், சிப்பந்திகள், உள்ளூர் அதிகாரிகள் ஆகியோர் ம. பொ. சி.யை உற்சாகமாக வர வேற்றனர். அங்கிருந்து இன்னிசை முழங்க நகர சபை மன்றத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். 7 மணிக்கு நகர சபைத் தலைவர் திரு. சி. எம். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமாகியது. நகர சபை கௌன்ஸிலர்களை ம. பொ. சி.க்குத் தலைவர் அறிமுகம் செய்தார்.

பின்னர் ம. பொ. சி. சிதம்பரனாரின் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், தேசியப் புரட்சியின் தந்தையாகிய வ. உ. சி. எல்லாத் தமிழராலும் பாராட்டற்குரிய பெரியா ராக விளங்குவதை விரித்துக் கூறினார். நகர சபையார் உள் ளூர் சமய வேற்றுமைகளைக் களைந்து, 'தமிழன்' என்ற இனவுணர்ச்சியைப் பரப்புமாறும், ஸ்தல அமைதிக்காக போலீஸ் உதவியை நாடாது, சர்வ கட்சியினரும் அடங்கிய சமாதானப் படையை நிறுவிப் பாடுபட வேண்டு மென்றும், நகர சபை ஒரு சுதந்திர அரசாங்கத்தைப் போன்று விளங்க வேண்டுமானால், இப்போதுள்ளதைவிட அதிக அதிகாரங்களை அரசாங்கத்தினிடமிருந்து பெற வேண்டு மென்றும் கூறினார்.

நகர சபை சார்பாக ம. பொ. சி. அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டது. அதில் தமிழரசுக் கழகத்தின் கோரிக்கைகள், அதன் சேவைகள் ஆகியவை பாராட்டப்பட்டிருந்தன.

பின்னர், முனிசிபல் உயர் நிலைப் பள்ளி மைதானத்தில் திரு. சி. எம். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஒரு

பொதுக் கூட்டம் நடை பெற்றது. மைதானம் முழுவதும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது. உள்ளூரி லுள்ள பல்வேறு தொழிற் சங்கங்களும், தேசிய சங்கங்களும் ம. பொ. சி.க்கு மாலை சூட்டி வரவேற்றன. பிறகு, சுமார் ஒரு மணி நேரம் "வ. உ. சி.யும் தமிழரும்" என்ற பொருள் பற்றிப் பேசினர். இந்த விழாவை முன்னிட்டு உள்ளூர் தமிழரசுக் கழகத் தொண்டர் படையினர், கழகக் கோரிக்கை களை வெளியிடும் தோரணங்களை வீதிகள்தோறும் கட்டி அலங்கரித்திருந்தனர். இம்மாதிரி சர்வ கட்சியினரும் ஒன்று கலந்து விழாவைச் சிறப்புற நடத்தியது திருப்பத்தூரிலேயே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கி யிருக்கிறது.

சிறந்த இலக்கிய நூல்கள்

கள்ளோ ? காவியமோ ?	(மு. வரதராசன் M.O.L.)	3	8
தமிழ் நெஞ்சம்	,,	2	4
செந்தாமரை	,,	2	8
வள்ளுவர்தந்த இன்பம்	(திருக்குறள் காமத்துப்பால் ராய. சொ.)	3	0
வ. உ. சி. சுயசரிதை	(வ. உ. சி.)	3	8
பாரதிதாசன் கவிதைகள்	(ஆறும் பதிப்பு)	3	8
உவமை நயம்	(பாரதிதாசன் கவிதை விளக்கம்)	1	0

பாரி நிலையம்

59, பிராட்வே சென்னை – 1

தமிழ் வீரன் குமரன்

கா. லட்சுமணன்

கோவை ஜில்லாவில் சென்னிமலை என்ற ஊரில் 1904-ம் ஆண்டில் வீரக் குமரன் தோன்றினார். தந்தை பெயர் நாச்சி முத்து; அன்னையின் பெயர் கருப்பாயி. அடிமை நாட்டில் நெசவுத்தொழில் செய்யும் வறுமைக் குடியில் தோன்றிய காரணத்தால் குமரனின் பள்ளிப்படிப்பு ஐந்தாவது வகுப்போடு முற்றுப்பெற்றது. கலைமகள் தரிசனமிழந்து, குடும்பத் தொழிலாம் நெசவுத்தொழிலில் ஈடுபட்டார். அத்தொழிலில் நன்கு பயிற்சி பெற்ற பின் சொந்தத்தில் தறி வைத்துப் பாடுபட்டுப் பிழைத்தார். குமரனுக்கு 18-ம் வயதில் திருமணம் நடந்தது.

'செய்யுந் தொழிலைச் சீர் தூக்கிப்பார்க்கின் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை' என்பது மறை மொழி. ஆயினும், குமரனுடைய உள்ளம் அதில் நாட்டம் கொள்ளவில்லை. வறுமையைப் போக்கி வருவாயைப் பெருக்க வழி தேட எண்ணினார். திருப்பூர் கடையொன்றில் குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். அதனாலும் வருவாயைப் பெருக்க வழியில்லை; வாழ்க்கை சிறக்கவில்லை. இந்நிலையில் குமரனின் உள்ளம் நொந்தது. தான் மட்டுமின்றி, நாட்டில் பெரும்பாலான மக்கள் கேவல நிலையில் உயிர் வாழ்வதை எண்ணி ஏங்கினார். நாடு அடிமையிலிருந்து விடுபட்டு மக்கள் பொருளாதார சமத்துவம் பெற்றாலொழிய மக்கள் வாழ்வாங்கு வாழ முடியாது என்று நம்பினார். எனவே, குமரன் காங்கிரஸ் மகாசபையில் கலந்து அதன் ஆணை வழியில் நின்று தேசியத் தொண்டாற்றினார்.

1932-ம் ஆண்டில் காந்தியடிகள் சட்ட மறுப்புப் போராட்டத்தைத் துவக்கினர். அதன் காரணமாக லார்டு வெல்லிங்டனின் அடக்குமுறை தலைவிரித்தாடியது. 'வந்தே மாதரம்' என்றால் வந்தது வம்பு. மூவர்ணக்கொடி எங்கும் தலை காட்டக்கூடாது. தடையுத்தரவுத் தண்டோராக் கேட்டால் மக்கள் வீதியில் தலைகாட்டப் பயந்த காலம் அது. தொண்டர் கூட்டத்தைப் போலீஸார் வேட்டையாடிய கொடுமை சொல்லி முடியாது. கண்ணீர் புகை, தடியடி, துப்பாக்கி வேட்டு இவைதான் அன்றாடக் காட்சிகள். குடும்பப் பற்றுக்கும் நாட்டுப் பற்றுக்குமிடையே தத்தளித்தார் குமரன். முடிவில், அடிமையாக ஆயிரம் ஆண்டு வாழ்வதை விட சுதந்திரப் போரில் மடிவதே சிறந்தது என்ற எண்ணத்தோடு சத்தியாக்கிரகப் போரில் கலந்துகொள்வதெனத் தீர்மானித்தார். தன்னை ஈன்ற வீரத்தாயினிடம் விடைபெற்றுக்கொண்டு 1932-ம் வருடம் ஜனவரி 10-ம் நாள் திருப்பூரில் சட்டத்தை மீறும் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கினர். "சொந்த நாட்டில் பிறர்க் கடிமை செய்தே துஞ்சிடோம், இனி அஞ்சிடோம்" என்ற பாரதி பாடலைக் கம்பீரமாகப் பாடிக்கொண்டு வீதிகளில் பவனி வந்தார். ஊர்வலம் போலீஸ் ஸ்டேஷன் வழியாக வந்தது. போலீசார் குறுக்கிட்டு ஊர்வலத்தைக் கலையுமாறு கட்டளையிட்டனர். மறுக்கவே, தடிகொண்டு தொண்டர்களைத் தாக்கினர். ஊர்வலத்திலிருந்த தொண்டர்கள் நாலா பக்கங்களிலும் சிதறியோடினர்.

ஆனல், நம் குமரன் மட்டும் முன் வைத்த காலைப் பின் வைக்காமலும் கையில் பிடித்த தேசியக்கொடியைக் கீழே விடாமலும் தலையிலணிந்த காந்திக் குல்லாயைக் கழட்டா

மனும் மிகத் துணிச்சலாக, "உயிரைக்கொடுத்தாலும் கொடுப்பேன்; கொடியைக் கொடுக்கமாட்டேன்" என முழங்கினர். அதற்குள்ளாக சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தன் கையிலிருந்த குண்டாந்தடியால் குமரன் மண்டையின்மீது ஓங்கி அடித்தார். அடி பொறுக்க மாட்டாது குமரன் கீழே விழுந்தார். அந்தோ! இளங்காளையின் மூளை சிதறி, தன்மானம் மிக்க தமிழ் ரத்தம் பெருக்கெடுத்தோடி மண்ணிற் கலந்தது. அப்போதும் குமரன் கையில் பிடித்த கொடியை விடவில்லை. அவருடனிருந்த திரு. பி. எஸ். சுந்தரத்தின் காலை முறித்து, காது செவிடாகும்படி அடித்தது போலீஸ் கூட்டம். குற்றுயிராயிருந்த குமரன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைகள் ஏதும் பயனளிக்கவில்லை. 1932-ம் வருடம் ஜனவரி 11-ம் நாள் காலை, தமது 28-ம் வயதில் கொடியின் மானத்தைக் காக்க குமரன் உயிர் கொடுத்தார். உயிர் உடலைவிட்டுப் பிரியும்போது தன்னையும் மீறித் திணறிக்கொண்டு, "சுயராஜ்யம் கொடுக்கமுடியாதா?" என இரண்டு தடவை வாய்விட்டலறினர். மூன்றும் முறை சொல்லத் துவங்கியதும் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. தாயின் மணிக்கொடி என்றால் அவ்வளவு எளிதல்ல; உயிரினும் பெரிது என்பதை சொல்லாலன்றி செயலால் காட்டினர் அவ்வீரர். அவரே தமிழகத்தின் வீரத்திற்கு நேர் பிரதிநிதியாவார்.

காந்திஜி, 1945-ல் "செய் அல்லது செத்து மடி" என்றார். இதை 1932 லேயே செய்து காட்டினர் குமரன். குமரனின் விடுதலைக் கனவு, நனவாகிவிட்டது. ஆனல், விடுதலைக்கு உயிர் நீத்த அந்த வீரத் தியாகிக்கு நினைவுச் சின்னமில்லை. அவரது நினைவு நாளைக்கூட

தமிழ்ப் பத்திரிகைகளில் பெரும்பாலனவை கொண்டாடுவ தில்லை. குமரனை ஈன்ற வீரத்தாயும், அருமை மனைவியும் இன் றும் நம்முடனிருக்கின்றனர். அவ்வீரக்காளையைச்சிலைவடிவில் அவர்கள் கண்ணாரக் கண்டு மகிழுவேனும் குமரன் போன்று உருவச் சிலையைத் தமிழர் நிறுவமுடியாதா? நன்றி மறப்பது தமிழர் மரபல்லவே! எந்தக் கொடிக்காக குமரன் உயிர் நீத்தாரோ அந்தத் தேசியக்கொடி நாடுமுழுவதும் பாராளு மன்றம் முதல் பாமரன் குடிசை வரை சுதந்திரக் காற்றில் ஆடிப் பறக்கின்றதே! குமரனுக்கு ஆக்க வேலையின் தலை நகரான திருப்பூருக்கு "குமரன் நகர்" எனவும் பெயரிடலாம். தனித் தமிழ்க் குடியரசின் கீழ் நடக்கப்போகும் தமிழ்ச் சட்டசபையின் முன்பு குமரன் போன்று ஒரு உருவச் சிலையும் அமைக்க வேண்டும். இவைகளைச் செய்ய முனைவார் களாக தமிழ் மக்கள். இதுவே என் வேண்டுகோள்.

தொடர் கதை

அந்த நாள்

மு. வரதராசனார்

குறிப்பு:—

'முரசி'ல் தொடர்கதை இல்லை என்ற குறை இத்தனை நாளும் வாசகர்களுக்கு இருந்து வந்ததை நாமறிவோம். அந்தக் குறையைப் போக்க, பேராசிரியர் மு. வரதராசனார் முன்வந்துள்ளார். "அந்த நாள்" என்ற தலைப்புடன் இந்த இதழிலிருந்து கதை தொடர்ந்து வெளியாகும். பேராசிரியர் மு. வ. அவர்களின் எழுதும் திறன் தமிழகம் நனகறிந்ததே. "கி. பி. 2000", "கள்ளோ? காவியமோ?" என்ற அவரது நூல்கள் புதிய தமிழகப் புரட்சிக்கு வித்துக்கள் போன்றவை. அத்தகைய பேரறிஞர் 'முரசு'க்குத் தொடர்கதை எழுத முன்வந்ததற்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

[சொந்த நாட்டிலும் தமிழர்கள் பல் தொல்லைக்கு ஆளாகிறார்கள். உலகப் போர் நடந்தபோது இது தெளிவாகத் தெரிந்தது. ஹிட்லரின் மண்ணாசை எப்படியோ படிப்படியாக முற்றி முற்றி ஆசியாவை அல்லல் படுத்தியது. தமிழர் குடியேறி வாழும் ரங்கூன் நகரம் போர்க்களமானது. தமிழ்க் குடும்பங்கள் தமிழ்நாட்டை நோக்கிப் புறப்பட்டன. வெள்ளையர்க்கு விமானங்கள் கிடைத்தன. மற்றவர்களுக்குக் கப்பல் கிடைத்தன. பொறுமைக்குப் பெயர்போன தமிழர்களுக்குக் காலால் நடக்கும் வாய்ப்புத்தான் கிடைத்தது.

அறிவுக்கும் உண்மைக்கும் உணர்வுக்கும் எடுத்துக்காட்டான ஒரு தமிழ்க்குடும்பம் வெடிகுண்டுகளின் ஒலியைக் கேட்டுப் பழகித் தயங்குகிறது. குடும்பத் தலைவர் ஆறுமுகம் மனைவியோடும் மகளோடும் இருந்துகொண்டு வருந்துகிறார். புறப்படத் துணிகிறார்.]

1. ஆறுமுகம்

அன்று இரவு என் மனம் பட்டபாடு சொல்ல முடியாது. எதற்காக? இந்த உடம்பைக் காப்பாற்றி இன்னும் நெடுநாள் வாழ்வதற்காகவா? அல்ல; அல்ல. நான் ஏட்டுப் படிப்போடு நின்றவன் அல்ல. நான் கற்ற தாயுமானவர் பாட்டு, மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி 'நல்ல சொற்பொழிவாளன்' என்று பெயர் எடுப்பதற்காக அல்ல. தாயுமானவர் பாட்டில் உள்ள ஒவ்வொரு கருத்தையும் நம்பு

கின்றவன் நான். உடம்பு ஒரு சொக்காய் என்று ஊராருக்குச் சொல்லிவிட்டு, உடம்பே எல்லாம் என்று இரவும் பகலும் அதற்காகவே வாழ்கின்றவனல்ல நான். அந்தப் போரில் சேர்ந்து உயிர்விடத் துணிந்துள்ள சிப்பாய்களில் என்னைப் போல் அஞ்சாத வீரன் ஒருவன் இருப்பானு? அவர்கள் எல்லாரும் வயிற்றுணவுக்காகத் துப்பாக்கி எடுத்துச் சென்றவர்கள்; கூலிக்காகக் காக்கியுடை அணிந்தவர்கள்; வேறு வழியில்லாமையால் வீரம் பேசி நடிப்பவர்கள். எதிரி விமானம் பறக்கும் போது தலைதூக்கிப் பார்க்க அவர்களுக்கு ஆண்மை உண்டா? போர்க்களத்திற்குச் செல்லுமுன் பேதைகள் போல் கலங்கி யல்லவா செல்கிருர்கள். பாவம்! அவர்களைக் குறைகூறிப் பயன் என்ன? அவர்களும் மனிதர்கள். அவர்களுக்கும் வாழ்க்கையில் அச்சம் உண்டு.

முந்தா நேற்று இரவு மனைவியையும் மகளையும் மாடியை விட்டு இறங்கிக் கீழே சென்று ஒதுங்கி யிருக்குமாறு வற்புறுத்தினேன். நானு வற்புறுத்தினேன்? மனைவி அவ்வளவு எளிதில் என் சொல்லைக் கேட்டு நடப்பாளா? ஏ. ஆர். பி. காரர் வற்புறுத்தினுர்கள். சங்கு ஒலித்தவுடனே, அவர்கள் எல்லாரும் மூலைக்கு ஒருவராய்ப் பறந்து வீடுதோறும் எச்சரிக்கை செய்தார்கள். அப்போது முதலிலேயே நான் சொன்னேன். அவள் கேட்க வில்லை. விளக்கெல்லாம் அணைத்து விட்டோம். படுக்கை விளக்கு மட்டும் மினுக் மினுக் என்று எரிந்து கொண்டிருந்தது. சன்னல் கதவுகளின் சந்தில் அது எப்படியோ தெரிந்து இரண்டு பேர், "யாரது மேலே இன்னும் விளக்குத் தெரியுது! யார் சார்? வீட்டு நெம்பர் குறித்துக் கொண்டு போகட்டுமா? என்ன சொன்னுலும் கேட்க வில்லை" என்று வீட்டுக் கதவைத் தட்டினுர்கள். "அபராதம் தண்டனை தான் சொன்னபடி கேட்கும்" என்று முணுமுணுத்தார்கள். உடனே கீழே இருந்த குடித்தனக்காரர் தங்களுக்கு அபராதமும் தண்டனையும் கிடைக்குமே என்று பயந்து எங்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். நான் உடனே அந்த ஏ. ஆர். பி. காரரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, விளக்கை

முற்றிலும் நிறுத்தி விட்டு, அவளையும் வாணியையும் கீழே அழைத்துக் கொண்டு நகர்ந்தேன். "இன்னொரு முறை தொந்தரவு கொடுக்க வேண்டாம் ஐயா" என்று சொல்லி விட்டு அவர்கள் நகர்ந்தார்கள்.

கீழ்அடுக்கில் விட்டு விட்டு நான் மேலே வந்தேன். எனக்கு உயிரைப்பற்றிய கவலையே இல்லை. ஏதோ ஒருவகை முரட்டுப் பிடிவாதம் என்று சொல்வதற்கில்லை. கட்டிடத்தின் மேல் குண்டு விழுந்தால் தப்புவார் ஒருவரும் இல்லை. இந்த நிலைமையில் கட்டிடத்தின் மேல் அடுக்கில் இருந்தால் என்ன? கீழ் அடுக்கில் இருந்தால் என்ன? என்று எனக்குத் தோன்றியது. தவிர, கீழடுக்கில் தற்காப்புக்கு ஒதுக்கிடமாகக் குறித்த இடத்தில் ஏறக்குறைய அறுபது பேர் இருக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் இருந்து தொல்லைப்படுவதை விட மேலே இருந்து தனிமையில் ஏதாவது எண்ணிக் கொண்டிருக்க விரும்பினேன். உண்மையான காரணம் இதுவாக இருக்கலாம் என் மனதில் அவளையும் வாணியையும் எப்படியாவது சென்னைக்கு அனுப்பிவிட வேண்டும் என்ற துணிவான முயற்சி இருந்தது. ஆனால் அதற்கு அவள் இணங்கவில்லை. அதற்கு என்ன செய்யலாம் என்ற போராட்டம் உள்ளத்தில் இருந்து வந்தது. உள்ளத்தில் போராட்டம் எழும்போதெல்லாம் தனிமையை நாடுவது என் இயற்கை. வெளிப் போராட்டமாக—வேறு போராட்டமாக இருந்தால் அவளிடம் சொல்லி ஆறுதலும் ஊக்கமும் பெறலாம். துணைவி என்பது அதற்குத் தானே! சமையல் வேலைக்கும் குழந்தை வளர்ப்புக்கும் அவளைத் துணைவி என்று சொல்வது பொருந்தாது அல்லவா? ஆனால் இந்தப் போராட்டம் வெளிப் போராட்டம் அல்ல; வீட்டுப் போராட்டம். வேறு போராட்டம் அல்ல; அவளைப்பற்றிய போராட்டமே. ஆகையால் அவளை விட்டுத் தனியே இருக்கவே விரும்பினேன்.

சங்கொலி கேட்டாலும் சரி, ஏ. ஆர். பி. தொண்டர்களை எங்கே கண்டாலும் சரி, தமிழ் நாட்டுக்குப் போகின்றவர்

களைக் கண்டாலும் சரி, பத்திரிகைச் செய்திகளைப் படித்தாலும் சரி, என் மனம் போராடத் தொடங்கும். அவளை எப்படியாவது அனுப்பிவிட வேண்டும் என்று துணிவேன். அடுத்த நொடியிலேயே என்ன சொல்லியும் அவள் மனத்தை மாற்ற முடிய வில்லையே என்று திகைப்பேன். வாணியை மட்டுமாவது அனுப்பிவிட எண்ணுவேன். அருமைக் குழந்தையைத் தனியே திக்கற்ற நிலையில் அனுப்புவதா என்று சோர்வேன். இந்தப் போராட்டத்தின் எல்லையை அன்று இரவு கண்டேன்.

திடீரெனத் தெருவெல்லாம் சீழ்க்கை ஒலி கேட்டது. மூன்றும் வீட்டில் கதவைத் தட்டினார்கள். "வெளிச்சம், யாரையா?" என்று விடாமல் கேள்வி எழுந்தது. யாரோ ஒருவர் சிகரெட் பற்றவைத்தாராம். அந்த நெருப்புக் குச்சியின் ஒளியும் தெரியக் கூடாது என்று அவ்வளவு கடுமையாக இருந்தது. சீழ்க்கை மேலும் மிகுதியானது. ஏ. ஆர். பி. தொண்டர்கள் பரபரப்பாக ஓடும் காலடிச் சத்தம் கேட்டது. [illegible]ழடுக்கில் இருந்தவர்கள் கவிழ்ந்து படுத்துக் கொண்டும் காதில் துணி அடைத்துக் கொண்டும் வாயில் ரப்பர் துண்டு வைத்துக் கொண்டும் கிடந்தார்கள். அவர்கள் பேச்சும் அடங்கிற்று.

என் மேசை மேல் இருண்ட இருட்டில் ரப்பர் துண்டு குறித்த இடத்தில் இருந்தது. நான் மேசையின் கீழோ கட்டிலின் கீழோ கவிழ்ந்து கிடக்க எண்ணினேன். "கவலையில்லை" என்றது மனம், விர் விர் என்று விமானங்கள் பறக்கும் ஒலி கேட்டது. என் கை ரப்பர் துண்டை எடுத்து பற்களுக்கு இடையே வைத்தது. நாற்காலியில் இருந்தபடியே கண்களை மூடினேன். நெஞ்சம் படபடத்தது. செவியில் விமான ஒலி தவிர வேறொன்றும் கேட்கவில்லை. தெருவெல்லாம் அமைதி நிலவியது. "கண்டார் நகைப்புயிர் வாழ்க்கை" என்ற தாயுமானவர் பாட்டை நினைத்தேன், அந்த ஓரடி தவிர அப்பால் ஓர் எழுத்தும் வரவில்லை. பல்லாயிர முறை படித்த பாட்டும் நினைவுக்கு வராத நிலையில்

இருந்தது உணர்ந்தேன். கண்களைத் திறந்தேன். இருள் மயம் கண்டேன். விமான ஒலி மேன்மேலும் மிகுவதை கேட்டேன்.

கண்களை மூடினேன். "நான் யார்" என்று என் மனதைக் கேட்டேன். இது அன்று, அது அன்று என்று நீக்கல் முறையில் தலைப்படவில்லை. இதுவும் அதுவும் எதுவும் என்று அணைக்கும் முறையில் முனைந்தேன். அந்த வீடு, அதன் கீழறுக்கில் கவிழ்ந்து நடுங்கும் உடல்கள், சுற்றுப்புறம் பதைக்கும் மனங்கள், விமான ஒலி, அந்த விமானங்கள், அவற்றை ஓட்டும் ஆட்கள், மனைவி மக்களை விட்டு அவற்றில் ஏறி நள்ளிரவில் உயிர் வேட்டையாடும் சிப்பாய்கள், வயிற்று வாழ்வுக்காக அவர்கள் முன் பின் அறியாத மக்கள் தலையில் எறியக் கொண்டுவரும் வெடி குண்டுகள், அவர்களையும் அவர்களுடைய விமானங்களையும் தாக்க எழுந்த தற்காப்பு விமானங்கள், அவற்றில் உயிருக்கு அஞ்சி நடுங்கிப் பறக்கும் சிப்பாய்கள், ஊர் எல்லையில் தற்காப்புக்காக அமைந்த பீரங்கிகள், அவற்றை இயக்க அருகே உள்ள சிப்பாய்கள், அங்கங்கே ஒதுக்கிடங்களில் கவிழ்ந்து படுத்துக்கிடக்கும் மற்றச் சிப்பாய்கள், இவ்வளவு போர்க்குக் காரணமாகத் தன்னலத்தை வளர்க்கும் சில முதலாளிகளும் அரசியலாளர்களும், அவர்கள் நாட்டுப் பற்றை வளர்க்கச் செய்யும் முயற்சிகள், அதற்கான அமைப்பு முறைகள், இவ்வளவுக்கும் காரணமாக மனம் அசையும் அசைவுகள் ஆகிய எல்லாம் பரம்பொருளின் கூத்து. என எண்ணினேன். விமான ஒலி மீண்டும் மிகுதியாயிற்று. தலைக்கு மேல் விமானம் பறப்பதை உணரலானேன். தற்காப்புப் பீரங்கிகளின் வெடி முழக்கம் கேட்கலாயிற்று. விமானங்களிலிருந்து குண்டுகளும் விழுந்தன. நூற்றுக் கணக்கான இடி முழக்கங்கள் செவியைத் துளைத்தன. இவ்வொலியெல்லாம் அம்பலக் கூத்தனுடைய சிலம்பொலி என எண்ண முயன்றேன். நெஞ்சப் படபடப்பு இன்னும் நீங்கவில்லை. ஆயினும் தொடக்கத்தில் இருந்தது போல இல்லை.

ரப்பர் துண்டைப் பற்கள் இறுகக் கடித்துப் பற்றியிருந்தன. மூடின கண்ணைத் திறக்காமல் நாற்காலியில் ஒலி முழக்கம் கேட்டுக் கொண்டிருந்தேன்.

திடீரென அவளை நினைத்தேன். வாணியை நினைத்தேன். "நான் யார்" என்ற கேள்வியைத் துணைக்கு அழைத்தேன். அவள் நான் என்றும் அவள் போன்றே, அங்குள்ள எல்லா உயிரும் நான் என்றும் உணர முயன்றேன். வெடி குண்டு ஒன்று ஒரு பர்லாங்கு தொலையில் வெடித்தாற் போல் கேட்டதோ இல்லையோ, என் இரண்டு தோளும் இறுகப் பற்றப்பட்டு என் முகத்தோடு மற்றொரு முகம் சேர்ந்திருந்தது. ஒருவரும் வாய் திறக்க வில்லை. என்னைப் பற்றிய கைகளின் நடுக்கம் இவ்வளவு என்று சொல்வதற்கில்லை. அந்த இரு கைகளையும் சேரப் பற்றினேன். விமானங்கள் திரும்பும் ஓசை கேட்டது. மூன்று வீடுகளுக்கு அப்பால் ஒரு கட்டிடம் இடிந்து விழும் ஓசையும் கேட்டது.

என் முகத்தில் கண்ணீர்த் துளிகள் விழுந்தன. "பொன் முடி" என்றேன். பெரு மூச்சு விட்டாள். ரப்பர் துண்டை எடுத்து வைத்துவிட்டு "வாணி எங்கே" என்றேன். "தூங்குகிறாள் கீழே" என்றாள். "தப்பினோம்" என்றேன். "உன் மனம் கல் மனம்" என்றாள்.

"ஆமாம் கல் மனம்தான். அதுதான் வேண்டும் இளகிய மனத்தால் என்ன பயன்? இளகிய மனம் உடையவர்கள் தாங்களும் வாழ்வது இல்லை; மற்றவர்களையும் வாழ விடுவது இல்லை" என்றேன். அதற்குள் விமானங்களின் ஒலியே கேட்க வில்லை. தெருவில் பூட்ஸ் ஒலி கேட்டது. ஏ. ஆர். பி. தொண்டர்கள் ஒரு சிலர் நடமாடத் தொடங்கினார்கள்.

அவள் பெரு மூச்சு விட்டாள். அவளுடைய கண்ணீரை என் கையால் துடைத்தேன். "நான் உன்னை வாழவிட வில்லையா? என்றால் உன் வாழ்வுக்குத் தடையா? நான்

உன்னை விட்டுப் பிரிந்து போய் விட்டால் கவலை யில்லாமல் உன்னால் இருக்க முடியுமா? இருக்க முடியுமானால் நான் சொல்லாமல் போய் விடுகிறேன்'' என்று விம்மி அழத் தொடங்கினாள்.

இதுவரை மெல்லப் பேசிக்கொண்டிருந்தோம். தெருவில் தொண்டர்கள் நடமாடுவதை அறிந்ததும் பதுங்கியிருந்த மக்கள் தலைநிமிர்ந்து பேசத் தொடங்கிவிட்டார்கள். ''அம்மா! அம்மா!'' என்று வாணி அழைக்கும் குரல் கேட்டது. ''வா அம்மா! வாணி!'' என்று குரல் கொடுத்து இருட்டில் எழுந்து சென்றேன். அவள் எதிரே தடவிக் கொண்டு வந்தாள். கையைப்பிடித்து அழைத்துவந்து பக்கத்து நாற்காலியில் உட்காரவைத்தேன்.

''எங்கே''மா போய்விட்டாய்? நான் பயந்து நடுங்கிக் கொண்டே இருந்தேன். எல்லாரும் பேசத் தொடங்கிய பிறகு தான் பக்கத்தில் தடவிப் பார்த்து, ''அம்மா'' என்று கூப்பிட்டேன். நீ அதற்குள் மேலே வந்துவிட்டாயே'' என்றாள்.

''நான் இப்போதுதான் வந்தேன் அம்மா!'' என்றாள் மனைவி.

''என்னையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கக்கூடாதா? நான் எவ்வளவு பயந்து போயிருந்தேன்!'' என்றாள் வாணி.

''இதுதான் பழக்கமாய்விட்டதே! இன்னுமா பயம் வாணி!'' என்றேன்.

''இல்லைப்'பா இன்றைக்குத்தான் இவ்வளவு ஓசை கேட்டது. எப்போதும் இவ்வளவு வெடிகுண்டு கேட்டதில்லையே. ஐயோ, இன்னும்கூட என் நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டிருக்கிறது'' என்றாள்.

"இனிமேல் இந்த ஊரில் இருக்கக்கூடாது. வாணி! நீயும் அம்மாவும் நாளைக்கே புறப்பட்டுப் போகவேண்டியது தான்" என்றேன்.

"நீயும் வந்துவிடுப்'பா. எல்லோரும் ஒன்ருகப் போய் விடலாம்" என்ருள்.

"அப்படிச் சொல்லம்மா" என்ருள் மனைவி.

"இப்போது விளக்குக் கொளுத்தக் கூடாதாப்'பா?" என்று வாணி என்னைக் கேட்டாள்.

"சங்கு பிடிக்கிறவரைக்கும் விளக்கு வெளிச்சமே கூடாது" என்றேன்.

"பகலில் வெளிச்சம் தெரிகிறதே! அப்போது என்ன செய்வது?" என்று வாணி மறுபடியும் கேட்டாள்.

"பகலில் இருட்டாக்க முடியாது. அதற்காக என்ன செய்வது?" என்றேன்.

"இன்றைக்கு விடியற்காலம் மூன்று மணிக்கு நிலா வரப் போகிறது. இன்னும் மூன்று நாளானல் அமாவாசை இருட்டு அப்புறம் பத்துப் பன்னிரண்டு நாளில் பட்டப்பகலாய் நிலவு இருக்குமே! அப்போது இந்தத் தொண்டர்கள் என்ன செய்யப் போகிருர்களோ?' என்று மனைவி குறுக்கிட்டாள்.

"அதைத்தான் நானும் சொல்லலாம் என்று இருந்தேன். அமாவாசைக்கோ, அமாவாசை கழித்த மறுநாட்களிலோ விமானப் படையெடுப்பு இருந்தாலும் ஒருவகையாகத் தப்பித்துக் கொள்ளலாம். ஆனல் பத்து நாள் கழித்து நல்ல நிலா வெளிச்சத்தில் ரங்கூன் பாழாய்ப் போகுமே! ஜப்பானியர் இந்த முறை நம்மைப் பொசுக்கிவிடுவார்களே?" என்றேன்.

“அதற்கு முன்னே நாம் எல்லாரும் போய்விடலாம்'ப்பா” என்றாள் வாணி.

“சொல்லம்மா! சொல்லு! அம்மாவுக்குச் சொல்லு!” என்றேன்.

வாணி வழக்கம்போல் சும்மா இருந்தாள். இதுபோன்ற நடுநிலை அவளுக்குப் பலநாளும் அனுபவமானது. இப்படித்தான் அம்மாவும் அப்பாவும் ஏதாவது சொல்லிக்கொண்டு “நீ சொல்லு, நீ சொல்லு!” என்று சொல்வார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அப்போதெல்லாம் எங்கள் இருவர் முகத்தையும் பார்த்துவிட்டுச் சும்மா இருப்பாள். இந்த இருளில் முகத்தைப் பார்க்க முடியாவிட்டாலும் அதே தந்திரத்தைக் கையாண்டாள். பதினெட்டு வயது நிரம்பிய பெண்ணுக்கு அவ்வளவு தந்திரம் வேண்டாமா?

வாணியை அழைத்துக் கொண்டு ஊர்க்குப் போகவேண்டும் என்று அவளிடம் பலமுறை வற்புறுத்தியதுபோல் அன்றும் வற்புறுத்தினேன். “இந்த ஒரு பேச்சுத்தவிர வேறு ஏதாவது பேசலாம்; இதைப் பேசுவதாக இருந்தால் பேசாமல் படுக்கைக்குப் போகலாம்” என்று உறுதியான குரலில் பேசினாள்.

“வீடு வாசல் உடையவர்கள் பலரும் ஓடிப் போய்க்கொண்டிருக்கும் காலத்தில் இப்படி வெளியூரில் வாடகை வீட்டில் வாழ்கின்றவர்கள் பிடிவாதம் செய்யலாமா?” என்று சொன்னேன். எதிர் வீட்டுப் பாக்கியநாதன் வீட்டாருக்கு இரண்டு மோட்டார்கள் சொந்தமாக இருந்தும் கப்பலும் கிடைக்காமல், வேறு வழியும் இல்லாமல், அவர்கள் ஒரு மோட்டாரில் புறப்பட்டுச் சிறிது தூரம் போய் அங்கிருந்து கால்நடையாகப் போகத் துணிந்ததை எடுத்துச்சொன்னேன். என் கம்பெனித் தலைவர்களுள் ஒருவராகிய சாமிநாதன் வீட்டார் விலையுயர்ந்த வெள்ளிச் சாமான்களை மட்டும் எடுத்துக்

கொண்டு, அருமையான வீட்டையும் வீடு, நிறையத் தட்டு முட்டுச் சாமான்களையும் அரிசி முதலிய பண்டங்களையும் அப்படியே விட்டுவிட்டுப் போவதையும் எடுத்துரைத்தேன். இன்னும், அதிகாரிகள் சிலர் வீட்டாரை அனுப்பிவிட்டுத் தாங்களும் பயணத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டிருப் பதைச் சொன்னேன்.

இவ்வளவும் கேட்டுக்கொண்டே இருந்தவள் ஒரே ஒரு பதிலாகப் பழைய பல்லவியைப் பாடிவிட்டாள். "இந்தக் கதை தவிர வேறு ஏதாவது பேசலாம்" என்றாள். உடனே படுக்கைக்குச் சென்றாள். பாராளும் மன்றத்தில் கேள்விகள் கேட்கும்போது முதலமைச்சருங்கூட இவ்வளவு கடுமையாகப் பதில் கொடுப்பதில்லையே என எண்ணிக்கொண்டிருக்கும் போது, தெருவில் மறுபடியும் பரபப்ரபு காணப்பட்டது. சீழ்க் கைகள் மிகுந்தன. "விளக்கணையுங்கள், விளக்கணையுங்கள்" என்ற ஆரவாரங்கள் எழுந்தன. தொண்டர்கள் காலடிச் சத்த மும் பெருகிற்று. மறுபடியும் சங்கு அழுதது. விமான ஒலி தெளிவாகக் கேட்டது. எதிரியின் விமானங்கள் என்று எல்லோர்க்கும் தெரிந்துவிட்டது.

அவள் படுக்கையிலிருந்து எழுந்து என்னிடம் வந்து "வாணியை அழைத்துக் கொண்டு எழுங்கள், கிடங்குக்குப் போகவேண்டும்" என்று கையைப் பிடித்து இழுத்தாள். அவள் பேசிய குரலிலும் நடுக்கம் இருந்தது; பிடித்த கையி லும் நடுக்கம் இருந்தது. எழுந்தேன்; மூவரும் சென்றோம். ரப்பர் துண்டை வாயில் வைத்துக்கொண்டு கவிழ்ந்து கிடந் தோம். வெடிகுண்டு ஓசை கேட்கவே இல்லை. விமான ஒலி அடங்கிற்று. எதிரி திரும்பிப் போய்விட்டான் என்றார்கள். தெருவில் மெல்ல மெல்லக் காலடிச் சத்தம் கேட்டது. எல்லாரும் பேசத் தொடங்கினார்கள். நாங்கள் மேலே வந்து படுத்தோம்.

(தொடரும்)

எங்கள் நூல்கள்

பிரிக்கப்பட்ட இந்தியா	ராஜன் பாபு	10	8	0
உலக சரித்திரம்	நேரு	8	12	0
சர்க்காவின் அரசியல்	கிருபளானி	2	0	0
இந்திய தேசீய காங்கிரஸ்	,,	1	4	0
அஹிம்ஸா புரட்சி	,,	1	4	0
விதி என்ன செய்யும்?	நேருவின் சகோதரி கிருஷ்ணா	4	8	0
சிறை வாழ்க்கை	விஜயலட்சுமி பண்டிட்	3	0	0
ராஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம்	ரமேச சந்திரதத்	4	8	0
மகாராஷ்டிர ஜீவன்உதயம்	,,	4	0	0
கந்தர்வ வாழ்க்கை	கி. ரா.	5	0	0
காதல்	வாண்டா வாஸிலெவ்ஸ்கா	3	12	0
தேச விடுதலைக்காக	,,	2	4	0
கட்ட பொம்மு	தி. நா. சுப்பிரமணியன்	2	8	0
அசலும் நகலும்	ஆ. முத்துசிவன்	3	0	0
மின்னல் கீற்று	,,	1	8	0
காஞ்சனமாலை	கு. ப. ரா.	2	8	0
எதிர்கால உலகம்	,,	1	4	0
புதுமைப்பித்தன் கதைகள்	புதுமைப்பித்தன்	4	0	0
மனைவி	தமிழ்வாணன்	1	0	0
ஸப்த நதிகள்	காகா கலேல்கர்	1	4	0
இந்தியாவும் பொதுநல சமுதாயமும்	க. சந்தானம்	2	4	0
இரட்டை மனிதன்	ஸ்டீவன்ஸன்	2	4	0
அத்தை மீறு	ஜெயினேந்திர குமார்	1	8	0

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி :: சென்னை - 5

ஆசிரியருக்குக் கடிதம்

கொச்சி சமஸ்தானத்தில் வசிக்கும் நூற்றிருபத்தைந்து ஆயிரத்துக்குக் குறைவுபடாத தமிழர்களையும் இதர தமிழ் மக்களோடு சேர்த்து அழைத்துச் செல்ல வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன். கொச்சி சமஸ்தானம் கிழக்கே கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மதுக்கரை, பொள்ளாச்சி இந்நகர்களை எல்லைகளாகவும், வடக்கே பாலக்காடு, ஷொரனூர் இந்நகர்களை எல்லைகளாகவும், தெற்கே திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த நகரங்களை எல்லைகளாகவும், மேற்கே குருவாயூர் முதலிய நகரங்களை எல்லையாகவும் கொண்டது. கொச்சி சமஸ்தானம் முழுவதிலும் தமிழர்கள் அங்கங்கே வசிக்கிறார்கள். ஆறு தாலூக்காக்களைக் கொண்ட இச் சமஸ்தானத்தில் கோவை மாவட்டத்தோடு, அதாவது தமிழகத்தோடு தொட்டுக் கிடக்கும் சித்தூர் தாலூக்காவின்கண் தமிழர்கள் பெரும்பான்மையாகவும் வசிக்கிறார்கள். இச் சித்தூர் தாலூக்காவின் முக்கால் பாகமும் ஒரு தமிழனுக்கு தமிழகமாகவே தென்படும் என்பதில் அணுவளவேனும் சந்தேகம் இல்லை.

எனவே, கொச்சி நாட்டுத் தமிழனையும் தமிழரசுக் கழகம் கவனிக்க வேண்டும். மக்களுக்கு கல்வி, அரசியல், பண்பாடு, பொருளாதாரம், நாகரீகம் முதலிய துறைகளிலும் பின்னணியிலிருக்கும் தமிழன் கொச்சியில் நாயினுங் கடைப்பட்டு நலிந்து மெலிந்து கிடக்கிறான் என்றே சொல்ல வேண்டும். பணக்காரத் தமிழர்கள் சுயநலமே பேணி ஏழைத் தமிழனை இதர சமூகத்தினர்களுக்குக் காட்டிக் கொடுத்து வருகிறார்கள் என்றால், அதுவும் மிகைப்படக் கூறினது ஆகாது. கொச்சியிலுள்ள பொதுநலத் தொண்டர்களுக்கு ஊக்கமளித்து உற்சாகமூட்ட நீங்கள் எங்கள் ஊருக்கும் வரவேண்டும்.

ஏ. சுப்பிரமணியன்
குன்னத்துபாளையம்
சித்தூர்.

உறவும் உரிமையும்

ஞானப்பிரகாசம்

தமிழருக்குத் தனியரசு வேண்டும் என்ற உடனேயே 'ஐயோ' பிற நாடுகளைப் பகைத்து வாழ்வதா? என்று அலறும் அரசியல் ஞான சூன்யங்களை நாம் காண முடியா விட்டாலும், கேள்விப்படுகிறோம். தனியரசு என்ற உடனேயே பிற அரசுகள் எல்லாம் பகையரசுகளாகிவிடும் என்று கருதுவானேன்? அப்படியானல் உலகத்தில் ஒருநாடும் தனியரசு நடத்தாமல் அல்லவோ இருந்திருக்கவேண்டும்? தமிழரது அரசியல் வரலாற்றை அறிந்த எவரும் இந்த ஞான சூன்யங்களின் அலறல் அறியாமையின்பாற் பட்டதே என்று அஞ்சாமல் கூறுவர். தமிழர் அரசாண்ட வரலாற்றை அறியாதவர்கள் இன்று அரசியல் தலைவர்களாகவும், அமைச்சர்களாகவும் வீற்றிருக்கும் தமிழகத்தில் தமிழருக்குத் தனியரசு என்றால் அதற்கு எதிர்ப்பு இருப்பதும், அந்தத் தமிழரசு பிற அரசுகளுக்குப் பகையாய்த்தான் இருக்கும் என்று பயம் காட்டப்படுவதும் இயற்கைதானே! அந்த மட்டில் தமிழரசு கேட்போரை, அடித்து விரட்டாத அளவுக்கு தமிழகத்து அரசியல் வாதிகள் சகித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக ஒவ்வொரு தமிழரசு வாதியும் 'நன்றி' செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் அரசியல் வரலாற்றை ஆராய்ந்தால், தமிழ் மூவேந்தர், பிற அரசுகளுடன் அல்லது அரசர்களுடன் உறவுகொண்டு வாழ்ந்ததை எளிதில் உணரமுடியும். எப்போதோ சில சமயங்களில் பிற நாடுகளுடன் தமிழரசுக்குப் பகை தோன்றி இருக்கலாம். அந் நாடுகளின்மீது படை எடுத்தும் சென்றிருக்கலாம். ஆனால், தமிழரசர்கள்,

பிற அரசர்களுடன் உறவுகொண்டு வாழ்ந்த சம்பவங்களோடு இதை ஒப்பிட்டுப்பார்த்தால்,பகைகொண்டு போரிட்ட சம்பவங்கள் மிகச் சிறியனவாகவே தோன்றும். மற்றும் அவை பகைவரின் வாய்க்கொழுப்பால் தோன்றியனவே ஒழிய தமிழரசர் வலுவில் செய்த சண்டைகளல்ல. வந்த சண்டையை விடாது, பகைவனை போரில் புறங்கண்ட போதும் அவனது நாட்டை—அந் நாட்டு மக்களை அடிமைப்படுத்தி கொடுங்கோலோச்சியதாகவும் ஆதாரம் இல்லை.

இனி தமிழ் வேந்தர், பிற நாட்டு அரசர்களோடு உறவு கொண்ட வரலாற்றை ஆராய்வோம்.

அந்நாளில் தமிழ் மன்னர் பிற நாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுவரை அனுப்புவது வழக்கமாக இருந்தது. அது போலவே பிறநாட்டுத் தூதுவர்களும் தமிழ் நாட்டுக்கு வருவதுண்டு. இப்படி பரஸ்பரம் அனுப்பப்படும் தூதுவர்கள் தாங்கள் செல்லும் நாட்டின் அரசருக்கு காணிக்கை செலுத்துவதும் உண்டு.

கி. மு. 20-ம் ஆண்டில் அதாவது இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ரோமாபுரியை ஆண்ட அகஸ்திஸ் சீசருக்கு பாண்டியன் ஒரு நல்லெண்ணத் தூதுக்குழுவை அனுப்பி யிருந்தான்.

இராஜராஜ சோழன் கி. பி. 1015-ல் தனது தூதுவரை சீனத்திற்கு அனுப்பி வைத்ததாக சீனநூல்களில் குறிப்பிட்டுள்ளன. அவனுக்குப் பின்னர் அரசாண்ட, கி. பி. 1034ல் ராஜேந்திர மன்னனும், கி. பி. 1077ல் முதலாங் குலோத்துங்கனும், சீன தேசத்து மன்னனுக்கு தூது அனுப்பி இருக்கின்றனர்.

ரோமாபுரி மன்னருக்கும், நம் தமிழ் வேந்தருக்கும், உடன் படிக்கைகள் பல ஏற்பட்டன. அந்த உடன்படிக்கைளைச் செய்துகொள்ள தமிழ்நாட்டு மன்னர் தமது தான திபதிகளை (Ambassidors) அவ்வப்போது அனுப்பி வந்ததாக ரோம்நாட்டு வரலாறுகள் அறிவிக்கின்றன.

கி. பி. 1286ல் பாண்டி வேந்தன் மங்கோலிய மன்னனை குலேகானிடம் தனது தூதுவரை அனுப்பி உறவு கொண்டதாக சீனவரலாறு கூறுகிறது.

அயல் நாட்டுப் போர் வீரர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து தமிழ் வேந்தரிடம் சேவகம் புரிந்ததாக தமிழ் இலக்கியங்கள் அறிவிக்கின்றன. யவனப் போர் வீரர்கள் மதுரைக் கோட்டையை காவல்புரிந்ததை பத்துப் பாட்டில் காண்கிறோம்.

எந்த அசோகச் சக்கரவர்த்தியின் அறவாழியைக் கொடியில் பொறித்து இன்றைய இந்தியப் பேரரசு தமிழகத்தைக் கட்டி ஆள்கிறதோ அதே அசோக சக்கரவர்த்தி தனது சாம்ராஜ்யத்தின் கீழ் தமிழகத்தை அடிமைப்படுத்த இயலாமல், ஜனநாயக போர்வையில் தமிழரை அடக்கி ஆள நினையாமல் அன்பு வழிபட்ட அரசியலால், தமிழரசோடு உறவுகொண்டு இருந்தான்.

அசோக வேந்தன் தமிழரசரை தமது நண்பர்கள் என கட்டளைத் தூண்களில் பொரித்து வைத்திருக்கிறான். இப்படி பெரும்பகுதி இந்தியா அசோக சாம்ராஜ்யமாகவும், சிறுபகுதித் தமிழக தனியரசும் பிரிந்திருந்த காலை இந்தியாவில், ஒற்றுமை குறைந்திருந்ததாகக் கூறமுடியாது. அதற்குப் பதில் உறவு, ஆழமாக வேரோடி இருந்தது. ஏனெ

னில் அசோகப் பேரரசு தமிழகத்தைச் சுரண்டும் புத்தி கொண்டிருந்ததல்ல. அசோகரின் அன்பு மதமாகிய புத்த மதம் தமிழகத்தில் பரவுவதற்குத் தமிழ் வேந்தர்கள் ஆதரவு காட்டினர். புத்த மடங்களுக்கு மானியங்கள் வழங்கினர். காரணமென்ன? புத்த சமயம் தமிழர் பண்பாட்டுக்குப் பொருந்துவதாக இருந்ததேயாம்.

சோழ, பாண்டிய மன்னர்களின் புகழ் கிரேக்க, ரோம, எகிப்து, பாரசீகம், யூதம், சாவகம், மலேயா, பர்மா ஆகிய நாடுகளெங்கும் பரவி யிருந்தது.

வெளிநாடுகளுடன் தமிழ் நாட்டார் வாணிபத்திலும், அரசியலிலும் மிக அழுத்தமான உறவுகொண்டிருந்தனர் என்பதை அதேகாலத்தில் வட இந்தியாவில் நிகழ்ந்துவந்த படையெடுப்புகளைக் கொண்டே அறியலாம். வட இந்தியாவின்மீது கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டுவரை ஓயாது முஸ்லிம்களின் படையெடுப்பு நிகழ்ந்து வந்துள்ளது. கடைசி நூற்றாண்டுகளிலே ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் தென்னிந்தியாமீது முஸ்லிம்கள் படையெடுப்பு நிகழ்ந்ததோடு அதன் பெரும்பகுதியை ஆண்டதும் உண்டு. இது சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர் ஆட்சிபுரிந்த காலத்திலன்று. வட இந்தியாவிலிருந்து தமிழகத்தில் சமயவெறியும், சாதிச் சழக்கும் படையெடுத்துத் தமிழினத்தைப் பல்வேறு கூறுபாடுகள் செய்து சிதைத்த பிறகே, தமிழ் நாட்டின்மீது முஸ்லிம் மன்னர் கண்ணோட்டம் வீழ்ந்தது. அந்நாளில் தமிழகம் பல்வேறு குறுநில மன்னர்களால் தனித்தனியே ஆளப்பட்டுவந்தது. பொதுவாகச் சொன்னால், தமிழர்கள்மீது கொண்ட பகை, காரணமாக, தமிழகத்தின்மீது எந்தப் படையெடுப்பும்

நிகழ்ந்ததாகக் கூறுவதற்கில்லை. வடநாட்டின்மீது படையெடுத்துவந்த இஸ்லாமியரும் தமிழ் நாட்டோடு நட்பு கொண்டு வாழ்ந்ததே தமிழகத்தின் வரலாறு.

மற்றும், சிக்கந்தர் தலைமையின்கீழ் வடநாட்டின்மீது படையெடுத்து, அதைப் போர்க்களமாக்கிய கிரேக்கரும் தமிழ் நாட்டோடு உறவாகவே இருந்தனர். கிரேக்கரில் சிலர் தமிழ் மன்னருக்குத் தொண்டுசெய்தும் வாழ்ந்தனர்.

வட இந்திய நாடுகளில் மக்களுடனும், அவற்றின் அரசர்களுடனும் தமிழ் வேந்தர் நட்பு கொண்டிருந்ததை வரலாறு அறிவிக்கிறது. இந்தியா பல நாடுகளாகப் பிரிந்திருந்ததன் விளைவாகத்தான், அந்நியரால் அடிமைப்படுத்தப்பட்டது என்பது அரசியல் வாதிகளின் ஆராய்ச்சி. பொதுவாக, இது உண்மைதான். என்றாலும், வட இந்தியாவில் முதலில் குடிபுகுந்த ஆரிய மதம் தனக்குப் பின்னால் தோன்றிய அல்லது குடிபுகுந்த சமண, பௌத்த, இஸ்லாமிய மதத்தினருக்கு இடமளிக்க மறுத்து, அவற்றை நசுக்க நடத்திய போராட்டங்களே இந்தியாவைச் சீரழிக்கக் காரணமாயிருந்தன. மற்றும், ஆரிய, சமயவாதிகள் புறச்சமயங்களை நசுக்குவதற்கு அரசியலையும பயன்படுத்தினா.

வடக்கே நிகழ்ந்த இந்தக் கொடுஞ்செயல்கள், கோரப் போராட்டங்கள் தெற்கேயும் படையெடுத்தன. அதுவரை, தமிழகத்து அரசியலில் சமயப் பூசல்கள் கலந்ததில்லை. சமயம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய எல்லா மதங்களும் ஒன்றோடொன்று மோதலின்றி வளர்ந்துவந்தன. இதைப் பத்துபபாட்டு, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களால் அறியலாம். அந்தநாளில் தமிழன் என்ற இன

வுணர்ச்சி ஒன்றுதான் தமிழ் மக்களிடையே வேரூன்றியிருந்தது. சமய உணர்ச்சியும் மக்களிடை இருந்ததென்றாலும், அது பகைமையற்ற சமய உணர்ச்சியாகவே இருந்து வந்தது.

வட நாட்டில் நிகழும் ஒவ்வொரு சம்பவமும் இந்நாளில் தென்னாட்டையும் தாக்குவது இயல்பாகி விட்டது. ஆனால், பண்டைநாளில் தமிழகம் தனியரசு நடாத்திய காலையில் அப்படியில்லை. வடக்கே கௌரவருக்கும் பாண்டியருக்கும் போர் நடந்ததாக கூறப்பட்ட சமயத்திலும் நம் தமிழ் வேந்தர் இருதரப்பிலும் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உணவளித்துக் காத்தனர். ஆனால், எந்த ஒரு தரப்பினருக்காகவும் படை அனுப்பியதில்லை.

இவ்வாறு வெளிநாடுகளோடும், இந்திய நாடுகளோடும் உறவு கொண்டு வாழ்ந்தது பண்டைத் தமிழரசு. போக்குவரத்தும், விஞ்ஞான அறிவும் போதிய அளவு அதிகப்படாத அந்த நாளிலும் தமிழர் பிற அரசுகளோடு நட்பு கொண்டு வாழ்ந்தனர் என்றால், விஞ்ஞான அறிவும், சேர்ந்து வாழும் சந்தர்ப்பமும், வர்க்க உணர்ச்சியும், சர்வதேச மனப்பான்மையும் வளர்ந்துள்ள இந்த நாளில் தமிழர் தனியரசு, இன்னொரு பாகிஸ்தான் ஆகிவிடும் என்று கூறுவோர், தமிழரது பண்பாட்டைப் பழித்துப் பேசுவோரே யாவர்.

ஆனால், இன்று தமிழர் வேண்டுவது இந்தியாவிலிருந்து பிரிந்து வெளிநாடுகளோடு தனியாக அரசியல் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்று நிதான புத்தியுடைய எந்தத் தமிழரும் கேட்கமாட்டார். தமிழருக்கு

உரிமை வழங்கினால் இந்தியாவிலுள்ள பிற இனங்களின் அரசுகளோடு இந்தியக் கூட்டரசில் தமிழரசு இணைந்தே இருக்கும். ஆனால், அந்தக் கூட்டுறவு கட்டாயத்தின் பேரில் ஏற்படுவதாயிருக்கக்கூடாது என்பதே ஒவ்வொரு தமிழரசுக் கழக வாதியின் எண்ணமாகும்.

" தமிழ்நாடு ஒருநாடு, தனிநாடு, யார்க்கும்
தலைதாழ்த்த வேண்டாத புதுநாடதாகி,
அமிழ்தான தமிழாலே அரசாட்சி செய்யும்,
அதுமிக்க தூரத்தில் இலையென்று காண்போம் "

—குயிலன்.

மயில் மாத வெளியீடு • விலை 0—4—0

மூன்றும் வெளியீடு 14-1-48ல் வெளிவருகிறது.

'மயில்' தமிழ் நாட்டின் சுதந்திரத்திற்காகவும்—தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் பாடுபடும். தமிழரசுக் கொள்கைகளைப் பின்பற்றி வெளிவருகிறது.

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை. மாதிரிப்பிரதி வேண்டுவோர் நான்கு அணா தபால் தலை அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

விவரங்கட்கு:—

நிர்வாகி, 'மயில்' நிலையம் திருப்பத்தூர் (வ. ஆ.)

தமிழரசுக் கொடி

கோ. மோ. ஜனார்த்தனம்
(செயலாளர், தமிழரசுக் கழகம்)

ஒரு நாடு என்றால், அதற்கொரு அரசுண்டு; அந்த அரசுக்கொரு கொடியுண்டு. அது முடியரசு நாடாயினும் சரி; குடியரசு நாடாயினும் சரி; பொதுவுடைமை நாடாயினும் சரி. அரசுரிமை யுள்ள நாடுகளி லெல்லாம் கொடியுண்டு. தமிழகமும் தனியரசை நடத்திய காலையில் தனக்கென கொடியைப் படைத்திருந்தது.

சோழ நாட்டுப் பெண்கள் தங்கள் 'மன்னனான கரிகால் வளவன் இமயத்தின் பிடரியில் பொறித்த புலிக்கொடியை இமயத்திற்கு அப்பால் மேரு மலைக்கும் கொண்டு செல்லும் புதல்வர்களைப் பெறுவீராக' என்று கோவலன் கண்ணகி திருமணத்தில் வாழ்த்தியதைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் சிலைக்கு இமயத்தில் கல்லெடுத்து, அதே இமயத்தில் சேர நாட்டின் விற்கொடியைப் பொறித்த செய்தி தமிழர் வீரத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

ஆட்சியால் தமிழகத்தின் அரசியல் கொடிகளும் மூன்றாயின. சேரருக்கு விற்கொடியும், சோழருக்குப் புலிக்கொடியும், பாண்டியருக்கு மீன்கொடியும் அரசுக்குரிய சின்னங்களாக விளங்கின. இந்த அரசர்களிடையே போர் மூளும் போதெல்லாம் அவர்களது கொடிகளும் போர்க்களத்தில் ஒன்றுக் கொன்று பகைக் கொடியாகச் சந்தித்ததுண்டு. என்றாலும், சாதாரண காலங்களில் அக்கொடிகளைத் தமிழ் மக்கள் (எந்த அரசின் கீழ் வாழ்வோராயினும்) அனைவரும் தங்கள் பண்பாட்டின் சின்னமெனக் கொண்டு போற்றினர். ஏன்? தமிழ் மன்னர்களுங்கூட, தமிழினத்தின் மறத்தன்மைக்குத்

தங்கள் தங்கள் கொடிகளைச் சான்ருகக் கொண்டதால்தான், இமயத்தில் அவற்றைப் பொறிக்க ஒருவரோடொருவர் போட்டி யிட்டனர்.

இன்றிருப்பது ஒரே தமிழ் நாடு. அதில் வாழ்வோர் ஒரே தமிழினத்தார். அவர் கோருவது ஒரே தமிழரசு. நமக்கு வேண்டுவதும் ஒரே தமிழ்க் கொடியாகும். எனவே, மூவேந்தர் சின்னங்கள் அனைத்தும் கொண்ட ஒரே தமிழ்க் கொடி நமக்கு இனப்பெருமையை உணர்த்தும் கருவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஒரு கட்சியின் சின்னங்களுள் தலையாயது கொடியே யாகும் தமிழரசுக் கழகத்தார் ஆரம்ப முதலே வில், புலி, கயல் ஆகிய மூன்று சின்னங்களைக் கொண்ட தமிழ்க் கொடியையே தங்கள் கட்சிக் கொடியாகக் கொண்டனர். இப்போது அதே கொடியின் அடிப்பாகத்தில் சிவப்பு நிறப் பகுதி ஒன்றைச் சேர்த்துள்ளனர். மொத்தக் கொடிக்குரிய துணியில் மூன்றில் ஒரு பகுதி செந்நிறம். மற்றைய இரண்டு பகுதி வெண்ணிறம். அந்த வெண்ணிறத்தில் பண்டை மூவேந்தரின் சின்னங்களாகிய வில், புலி, கயல் ஆகிய மூன்றும் பொறிக்கப்பட்டிருக்கும். இதுதான் தமிழரசுக் கழகத்தின் கொடி.

செந்நிறப் பகுதியைச் சேர்த்த காரணத்தைச் சிறிது ஆராய்வோம். உலக மெங்கும் பாட்டாளி மக்களின் உரிமையை விளக்குவதும், உணர்ச்சியைப் பெருக்குவதும் செந்நிறச் சின்னமே என்பது உறுதி பட்டுள்ளது. தமிழரசுக் கழகத்தார் கோருவது உழைப்புக்கு உரிமை தரும் சோஷலிசத் தமிழரசே யாகும். சோஷலிச அடிப்படையில் ஒரு புதிய தமிழகத்தை—புதிய தமிழினத்தை—புதிய தமிழரசை—உருவாக்குவதே தமிழரசுக் கழகத்தின் தலையான கடமை. இதை விளக்கத்தான் செந்நிறப் பகுதியை நமது கட்சிக் கொடியின் அடிப்பாகத்தில் வைத்திருக்கிறோம். இதைத் தமிழகத்து

உழைப்பாளி மக்கள், அவர்களது நலனைக் கோருப் அறிஞர்கள் அனைவரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

நமது கொடியிலுள்ள மூவேந்தரின் சின்னங்களைப்பற்றியும் சில வார்த்தைகள் கூறவேண்டும். பண்டை நாளில் தமிழகம் சேர, சோழ, பாண்டிய நாடுகள் என மூன்று பகுதிகளாக இருந்தது. அந்தப் பகுதிகளில் ஒன்றோடொன்று தொடர்பற்ற மூன்று அரசாங்கங்கள் நடை பெற்றன. அந்த அரசாங்கங்களைத் தனித்தனி அரசர் பரம்பரையினர் ஆண்டு வந்தனர். அவர் சேரர், சோழர், பாண்டியர் எனப்பட்டனர். அந்த அரசாங்கங்களுக்கு அல்லது அரச பரம்பரையினருக்கு மூன்று விதமான கொடிகள் இருந்து வந்தன*. சேரருக்கு விற்கொடி, சோழருக்குப் புலிக்கொடி, பாண்டியருக்கு மீன் கொடி ஆகியவை சின்னங்களாக விளங்கின இதைத் தவிர, இன்றுள்ளதைத் போல் மூன்று சின்னங்களும் ஒரே துணியில் பொறிக்கப்பட்டுத் தமிழகம் முழுவதற்கும் ஒரே கொடி இருந்து வந்ததாகச் சான்றுகள் இல்லை. அது மட்டுமல்ல; இந்த மூன்று கொடிகள் ஒன்றுக்கொன்று பகைக் கொடியாக போர்க்களத்தில் சந்தித்த சம்பவங்கள் பலவுண்டு. அந்தப் போரில் ஒரு கொடிக்குரிய அரசினர் மற்றொரு கொடிக்குரிய அரசினரைத் தோற்கடித்து அவர்களது நாட்டையும் கைப்பற்றித் தம் கொடிக்கீழ் ஆண்டதுண்டு. ஆனால், இன்று நாம் காண விரும்புவது மொழி வழியே குமரி முதல் வேங்கடம் வரை ஒன்றுபட்டுள்ள ஒரே தமிழகம்; அதற்கு ஒரே ஆட்சி. ஆகவே, ஒரே கொடி நமக்கு அவசியமாய் விட்டது.

தமிழ்க் கொடியிலுள்ள சின்னங்களைப்பற்றிய நுட்பங்களை ஆராய்ந்த அறிஞர்கள் ஒரு முகமான முடிவை வெளியிடவில்லை என்றாலும், அவர்கள் ஆராய்ச்சியில் வெளிப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் நமது பண்டைத் தமிழரசுகளின் பெருமையை விளக்குவதாகவே இருக்கின்றன. அதை இங்கு விரிக்கத் தேவையில்லை. பெருமைக்குரிய அந்தச் சின்னங்களை மீண்டும் நமது உரிமைக் கிளர்ச்சிக்குப் பயன்படுத்த

வேண்டுமென்ற கருத்துடனேயே அவற்றை நமது கட்சிக் கொடியில் பொறித்துள்ளோம். சுருங்கக்கூறின், தமிழரின் வீரவாழ்வு, மானமே உயிரினும் பெரிதெனமதிக்கும் பண்பாடு, தமிழ் நிலத்தின் நீர்வளம், தமிழ்ப் பெருமக்களின் உயர்ந்த எண்ணங்கள், காடுகளைத் திருத்தி நாடாக்கி நாகரிகத்தை வளர்த்த வரலாறு முதலியவைகளுக்குச் சான்றுகளாக அவற்றைக் கொள்ளலாம்.

இந்தப் புதுக்கொடியை அறிமுகப்படுத்தும் போது தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு சில எச்சரிக்கைகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆகஸ்ட். 15க்குப் பிறகு இந்தியாவில் தேசீயக் கொடியாகக் காட்சி யளிக்கும் அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டுள்ள மூவர்ணக் கொடிக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதைக்குப் பங்கம் நேரக்கூடாது. கட்சிக் கொடிக்கும் இந்தியாவின் தேசியக் கொடிக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நாம் மறந்து விடக்கூடாது. இந்திய தேசீயக் கொடியின் கீழ் நமக்குக் கிடைத்துள்ள பிரஜா உரிமைப்படியும், ஜனநாயகத் தத்துவப்படியும்தான் நாம் கட்சியை நடத்துகிறோம். எனவே, 2½ கோடி தமிழர்களாகிய நாம் சுமார் 32 கோடி இந்திய மக்கள் உரிமைக்கும் பெருமைக்கும் உரியதாய், உலக நாடுகளின் முன்னே இந்தியாவின் ஒருமையை உணர்த்துவல்லதாய் உள்ள தேசீயக் கொடிக்குப் பகையாகவோ, போட்டியாகவோ, நமது கட்சிக் கொடியைப் பயன்படுத்தக் கூடாதென்று கட்சித் தோழர்களுக்குக் கண்டிப்பாய் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய தேசீயக் கொடிக்குப் புறம்பாக இந்திய தேசீயக் கொடியைத் தவிர வேறு எந்தக் கொடியும் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இருக்கக்கூடாதென்று வம்பு பேசும் தேசீயவாதிகளும் உண்டு. இவர்களது தேச பக்தியை நாம் போற்றுகிறோம். என்றாலும், அது ஜனநாயக அரசியலுக்குப் பொருந்தாத தத்துவம் என்பதை அவர்கள் மறக்கக்கூடாது.

"தமிழ் முரசு" அட்டைப் பக்கத்தில் காட்சியளிப்பது தமிழரசுக் கழகத்தின் கொடியாகும். இத்தனை நாளும் 'கட்சிக்கு ஒரு தனிக்கொடி இல்லையே' என்று வருந்தியவர்கள் இனிக் களிப்படையலாம். கடந்த 9—11—47-ல் சென்னையில் கூடிய மாநிலத் தமிழரசு மாநாட்டில் நிறைவேறிய தீர்மானப்படி இக்கொடி தயாரிக்கப்பட்டிருக்கிறது. தமிழரின் உரிமைக்கும், பெருமைக்கும் உரிய இந்தக் கொடி தமிழர் திருவிழாவாகிய பொங்கல் நாளில் உயர்த்தப்படுவது குறித்து எல்லாத் தமிழ் மக்களும் மகிழ்ந்து பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

பொங்கல் புத்தாண்டில்

டி. கே. எஸ். சகோதரர்களின் புதிய நாடகம்

கோவை ஷண்முக

அரங்கில்

14-1-48 முதல்

தினசரி

பாடல்கள்:

கு. சா. கிருஷ்ணமூர்த்தி

புதன், ஞாயிறு மாலை 6-30 — மற்ற நாட்கள் இரவு 9-30 — திங்கள் விடுமுறை

பெண்களை உயர்த்துவோம்

சரஸ்வதி பாண்டுரங்கம்

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வ மிந்த நாட்டிலே" என்றார் பாரதியார்.

இது பாரதியாரின் கனவுமட்டுமல்ல; பண்டைக் காலத்தின் வரலாறும்கூட. இறைவழிபாட்டிலும், ஆணையும் பெண்ணையும் ஒருவடிவமாக்கி 'அர்த்தநாரி'த் தெய்வமாக வணங்கியது சமய வரலாறு. நீதிதவறிய பாண்டியன் நெடுஞ்செழியனின் அரசை அழித்த கண்ணகியின் புரட்சிச் செயல் தமிழ்ப் பெண்களின் அரசியல் நெறி.

ஆண் புலவர்களோடு பெண் புலவர்களும் சமமாக அமர்ந்து தமிழ் வளர்த்தது மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு.

இதெல்லாம் பழங்கதை. இன்றைய தமிழ்ப் பெண்களின் நிலைமை என்ன? வங்கப் பெண்மணியான சரோஜினி தேவியார் காங்கிரஸ் மகா சபைக்குத் தலைவியாக இருந்ததுண்டு. இன்றும் சுதந்திர இந்தியாவில் கவர்னர் பதவியில் வீற்றிருக்கும் முதல் பெண்மணி அவரேயாவர். ஆனால், தமிழ்ப் பெண்களில் எவரேனும் அகில இந்தியப் பதவியில் அமர்ந்ததுண்டா? இல்லை; இல்லை.

தமிழ் நாட்டில் பெண்மக்களின் எண்ணிக்கை சுமார் 52 சதவிகிதம். ஆனால், அவர்களுக்கு அரசியலில் 6 சதவிகித பிரதிநிதித்துவமும் கிடையாது. இது ஜனநாயகத்துக்கே ஒரு பெரிய இழுக்காகும்.

அரசியலில் மட்டுமல்ல; பொருளாதாரத் துறையில் பெண்கள்நிலை இதைவிட மோசமானது. ஒரு குடும்பத்தில் பிறந்த ஆண்களுக்கு மட்டும்தான் சொத்தில் பங்கு உண்டு. பெண்களுக்குக் கிடையாது.

சொத்துரிமை இழந்த பெண்கள், கல்வி, தொழில், வாணிபம் முதலிய துறைகளில் சுயமாக முயற்சி செய்து வளர்ச்சியடையவும் வழியில்லை. டாக்டர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், என்ஜினீயர்களாகவும் பெண்கள் நூற்றுக்கு ஒருவர்கூட வரமுடியவில்லை. அறிவுத் துறையில் பெண்கள் அடியோடு ஒடுக்கப்பட்டுள்ளனர். அத்துறை ஆண்களுக்கே ஏகபோக உரிமையாகிவிட்டது.

கூலித்தொழிலில் பெண்கள் சிறிது தாராளமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆம். உரிமையை மறுத்த ஆண்கள், பெண்களின் உழைப்பைப் பயன்படுத்திக் கொள்வதில் மட்டும் பின்வாங்குவதில்லை. உடல் வருந்தி உழைக்குந் தொழில்களில் வேலை நேரம், உழைப்புச் சக்தி எல்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒன்றாயிருப்பினும், கூலி விகிதத்தில் மட்டும் வேற்றுமை காட்டப்படுகிறது. ஒரேவிதமான வேலைக்கு ஆண்களுக்கு அதிக கூலியும், பெண்களுக்குக் குறைந்த கூலியும் கொடுக்கின்றனர். பாதை ஓரத்தில் பாடுபடும் பெண்களிலிருந்து பஞ்சாலையில் தொழில் செய்யும் பெண்கள்வரை இத்தகைய பாரபட்சமான கூலி விகிதம் காணப்படுகிறது. இது சகிக்க முடியாத கொடுமை.

கல்வி, தொழில் ஆகியவற்றில் பெண்களை ஆண்கள் திட்டமிட்டு நசுக்கும்வரை தமிழினம் முன்னேறுவதென்பது முடியாத காரியம். பண்டைநாளில் தமிழினம் பெருமை பெற்றிருந்ததற்குக் காரணம் பெண்களுக்கு உயர்வளித்ததேயாகும்.

ஒரு நாட்டு மக்களை இன்னொரு நாட்டார் அடக்கியாள்வது ஏகாதிபத்திய புத்தி என்கிறோம். ஒரு வர்க்கத்தாரின் உழைப்பை இன்னொரு வர்க்கத்தார் பயன்படுத்திக்கொள்வதற்கு முதலாளித்துவத்தின் சுரண்டல் என்கிறோம். ஆனால், ஒரே தமிழினத்தில் ஆண்கள், பெண்களைக் கட்டுப்பாடாக அடக்கியாள்வதும், அவர்களது உழைப்பைப் பறித்து வாழ்வ

தும், ஏகாதிபத்திய—முதலாளித்துவக் கொடுரங்களல்லவா? தமிழ்நாட்டார் பிறநாட்டுச் சுரண்டலிலிருந்து விடுபட்டு, சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசு அமைக்கப் பாடுபடும் இந்தத் தருணத்திலேனும், வர்க்கவேற்றுமைக் கொடுமைகள் தொலைவதுபோல், பால் வேற்றுமை இயற்கை என்றாலும், அதில் புகுந்துள்ள சுயநலக் கொடுமைகள் தொலைய வேண்டும்.

தமிழகத்தில் பெண்கள் விஞ்ஞானிகளாகவும், என்ஜினீயர்களாகவும், கப்பலோட்டிகளாகவும், டாக்டர்களாகவும் இதர தொழில் நுட்பங்கள் அனைத்தும் அறிந்தவராகவும் விளங்க வேண்டும். சோஷலிசத் தமிழகத்தில் ஆண்களுக்குப் பெண்கள் சமமாக மட்டுமல்ல, முன்னணியிலும் நிற்க வேண்டும் என்ற உணர்ச்சி பெண்மக்களுக்கு உண்டாக்க வேண்டியது சமத்துவ குணம் படைத்த ஆண்களின் கடமையாகும்.

தமிழ்ப் பண்பாடு அழிந்துவிட்டதென்று வருந்துகின்றோம். அந்த அழிவுக்குக் காரணம் என்ன? பெண்மக்கள் நாகரிகத்தில் குன்றி, நலம்பல குறைந்து ஒடுங்கியதன் விளைவேயன்றோ! இந்த நிலையிலுங்கூட 'இன்னும் தமிழ்ப் பண்பாடு ஓரளவேனும் உயிர்வாழ்கிறது என்றால், அது அடுப்பங்கரையில் சிறைப்பட்டுள்ள சீமாட்டிகளாலேயாகும். அந்தக் குற்றுயிராயுள்ள பண்பாடு சிறந்தோங்கி செங்கோலோச்சவேண்டுமானால், மீண்டும் தமிழ்ப் பெண்கள் உயர்வடைய வேண்டும். ஏதோ கருணையால் கைகொடுப்பதாகவோ, பிச்சையிடும் பிரபுத்துவ புத்தியாகவோ எண்ணி உதவி செய்ய முன்வருவதில் பயனில்லை, "சமூகம் உயர, பெண்களை உயர்த்துகிறோம். அது ஆணினத்தின் கடமையுங்கூட" என்று உணர்ந்து செய்யவேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழரசு காண இயக்கம் நடக்கிறது. தமிழகத்தின் பெருமை எல்லாம் சொல்லி, கிளர்ச்சிக்குப் படை திரட்டப்படுகிறது. இது அவசிய தான். அத்தோடு

தமிழரசு இயக்கத்தில் பெண்மக்கள் பங்குகொண்டு உழைக்க முற்பட்டால்தான், சமூகத்தின் அடிதளத்தில் சிக்கி வருந்தும் பெண்ணினம் முன்னேற வழியேற்படும்.

தமிழ்நாடு வளர்ச்சியுற—தமிழ்ப்பண்பு ஓங்க—தமிழகம் வாழ—தமிழரசு செலுத்த—ஆங்காங்குப் பெண்கள் சங்கம் அமைப்பது தமிழராயுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் செய்யவேண்டிய கடமையாகும்.

தமிழ் முரசு

உங்களுக்கு தவருது கிடைக்க வேண்டுமா? எங்களிடம் சந்தாதாரராகப் பதிவு செய்து கொண்டால் உங்கள் இல்லம் தேடி குறித்த காலத்தில் வந்து சேரும்.

கட்டண விவரம்;

ஆண்டு ஒன்றுக்கு	—	ரூ. 6—0—0
ஆறு மாதத்திற்கு	—	ரூ. 3—0—0

தபாற் செலவு—அவ்வப்போது வெளிவரும் மலர்கள் உள்பட.

●

'தமிழ் முரசு'ப் பதிப்பகம்

1/29, இருசப்ப கிராமணி தெரு

திருவல்லிக்கேணி, ::- சென்னை - 5

வாழும் நாள் எந்நாளோ?

"ஞானம்"

தமிழகம் தனியரசு நடாத்திய பண்டை நாளில், அது பிறநாடுகளோடு வாணிகம், அரசியல் ஆகிய துறைகளில் தனியே தொடர்பு கொண்டிருந்தது. இந்தியாவிலுள்ள இதர மொழி வழங்கும் நாடுகளைவிட தமிழகத்துக்கே உலகில் அதிக மதிப்பிருந்தது.

இடையில் வந்த ஆங்கில ஆட்சி தமிழகத்திற்கே உரியதாயிருந்த வெளிநாட்டு வாணிபத்தை, 'மத்திய சர்க்கார்' என்ற பெயரால் வட இந்திய வணிக மக்களின் ஏகபோக உரிமையாக்கிவிட்டது. அன்று உலக நாடுகளின் மதிப்புக்குரிய ஒரே சிறந்த துறைமுகம் காவிரிப்பூம்பட்டினத் துறைமுகமேயாகும். ஆனால் இன்று அயல்நாட்டு வாணிபம் வடவருக்கானதின் விளைவாக, பம்பாய் துறைமுகம் உலக வாணிகத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டது. எனவே, வருநிதி பிறர்க் காகஞம் இரு நிதிக் கிழவர் மாச்சோட்டான் செட்டிகள் மறைந்து சேட்களும், ஜீக்களும் பெருத்துவிட்டனர்.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற ஔவை மொழியொன்றே தமிழர் கடல் கடந்து வாணிபம் செய்வதைக் கடமையாக—கலையாகக் கொண்டிருந்தனர் என்பதை விளக்கும்.

மிகப் பழைய காலத்திலேயே தமிழ் நாட்டு வணிகர் கிழக்கு நோக்கிக் கடலகடந்து சென்று மத்திய அமெரிக்காவை அடைந்து அங்கு தங்கள் நாகரிகத்தைப் பரப்பினர்

என 'இந்து அமெரிக்கா' என்ற நூலில் அறிஞர் சாமன் லால் கூறுகிறார். தமிழ் வணிகர் உலக நாடுகளுக்குத் தங்கள் பண்டத்தை ஈந்து பொருள் தேடியதோடு, தமிழ்ப் பண்பாட்டைத் தந்து தமிழ் மரபுக்கும் புகழ் தேடிய பெருமையை என்னென்பது !

வேதங்களே மிகப் பழைய தென்பர் சமய வாதிகள். ஆனால் வேதங்கள் தோன்று முன்னரே தமிழர் சாலடியரோடு வாணிபம் நடத்தி வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கின்றனர். "மத்தியதரைக் கடல் நாடுகளுடன் தமிழகத்தின் ஒரு பகுதியாகிய பாண்டிய நாடு வாணிபஞ் செய்து வந்ததாக 'பிளினி' என்ற மிகச் சிறந்த ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

நாகரிகப் பொருள்கள் அனைத்திற்கும் முற்காலத்தில் உலக நாடுகள் தமிழகத்தையே எதிர்பார்த்திருந்தன. ஏலம், சந்தனம், கிராம்புபோன்ற வாசனைப் பொருள்கள் தமிழகத்திலிருந்துதான் பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. எகிப்து நாட்டு வணிகர் நம் தமிழகம் வந்து வாசனைச் சாமான்களை வாங்கி ஒட்டகங்களில் சுமந்து சென்றதாக யூதரின் சமய நூல் கூறுகிறது. அரேபிய நாட்டார் பாண்டிய நாட்டாருடன் குதிரை வாணிபம் செய்துவந்ததாகவும் அறிகிறோம். இதை, மாணிக்க வாசகர் வரலாறும் அறிவிக்கும். கி. பி. முதல் நூற்றாண்டில் கிரேக்க வணிகர்களுக்கு உபயோகமாக விருக்கும்படி எழுதப்பட்ட நூல்களில் தமிழகத்தின் கப்பல் வாணிபச் சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் அந்நாளில் மிகச் சிறந்து விளங்கிய காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தின் மூலமே நம் நாட்டி

லிருந்து உணவுப் பொருள்கள், வாசனைப் பொருள்கள், முத்து, பவளம் போன்ற மணி வகைகள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இந்தத் துறைமுகத்தில் ஏற்றுமதியாகக் கூடிய பொருள்களும் இறக்குமதியாகும் பொருள்களும், சோழ அரசாங்கத்தின் சின்னமான புலி முத்திரை யிடப் பட்டு மூட்டை மூட்டையாக போரேறி நின்றன. துறை முகத்தில், எல்லாப் பருவத்திலும் தமிழ் நாட்டுக் கப்பல் களும், பிறநாட்டுக் கப்பல்களும் அணியணியாக நின்று காட்சி யளித்தன. காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில்,

"நீரின் வந்த நிமிர் பரிப்புரவியும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் னெரிய ஈண்டி"

"கடல்வழியே வந்த குதிரைகளையும், ஈழ (சிங்கள) நாட்டி லிருந்து வந்த உணவுப் பொருள்களும் காழக (பர்மா) நாட்டிலிருந்து வந்த பொருள்களும், பிற அரிய பெரிய பொள்கள் யாவும் நிறையக் குவிந்திருந்தது" என பட்டி ணப்பாலை பகர்கிறது.

இவ்வாறு புகார்த் துறைமுகம் மூலம் தமிழர் பெற்றி ருந்த உலக வாணிபச் சிறப்பை ஒரு தனி நூலாகவே எழு தலாம்.

பிற நாட்டிலிருந்து தமிழர் பெற்ற பொருள்களை அறிந்தால் அக்காலத் தமிழரின் நாகரிகச் சிறப்பு தெற் றென விளங்கும். யவனர் பெரிய கப்பல்களில் தங்கம் கொண்டுவந்து தமிழருக்குத் தந்து, அதற்கு ஈடாக தமி ழகத்திலிருந்து மிளகை வாங்கிச் செல்வார்களாம். அலா ரிக் என்பவன் ரோம் நாட்டின்மீது படையெடுத்து வந்த

போது, அவனுக்கு 3000 பவுண்டு மிளகு கொடுத்து சமாதானம் செய்தனராம், ரோம நாட்டினர். இது தமிழ் நாட்டு மிளகே என்பதைக் கூறவும் வேண்டுமோ? தமிழ் நாட்டிற்கும், உலக நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற வாணிபத்தில் மிளகுக்கு இருந்த மதிப்பு பிற பொருள்களுக்கில்லையென்றால் மிகையன்று.

பாண்டி நாட்டின் காயற்பட்டினத் துறைமுகத்தைப் பற்றி மார்க்காபோலோ என்ற பெயர்பெற்ற யாத்ரீகர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

> "காயல் பட்டினத்தில் சுறுசுறுப்பான வாணிபம் நடந்தது. மேற்கிருந்து வரும் சப்பல்கள் காயல் பட்டினத்தில் தங்காமல் போவதில்லை, இந்தியா, சீனு மற்றும் மேனுடுகளின் பொருள்களெல்லாம் இங்கு வந்து குவியும். சுதேசிகளின் சாமான்கள் ஏராளமாக ஏற்றுமதியாகிப் பொன் குவியும். **இந்நாடே (தமிழ் நாடே) இந்திய வாணிகத்தின் திறவுகோல்.**"

இவ்வாறு உலக அறிஞர்களால் பாராட்டப்பட்ட காயல் பட்டினத் துறைமுகம் இற்றைநாளில் சிறப்பிழந்து நிற்கிறது.

ஒருகாலத்தில் அரசியல், வாணிபம், நாகரிகம், கலை ஆகிய துறைகளில் உலகில் சிறப்புற்று விளங்கியது ரோமாபுரியே யாகும். அந்த ரோமாபுரியோடு எல்லாத் துறைகளிலும் போட்டி யிட்ட இன்னொரு நாடு உண்டென்றால், அது தமிழ் நாடே யன்றி வேறல்ல. தமிழ் நாட்டின் வளர்ச்சியைக் கண்டு ரோமாபுரி பொறாமை கொண்டது.

> "இந்தியா வாணிபத்தால் ரோமாபுரியை வற்றடிக்கிறது. இந்தியாவுக்குள் பொன்னுறு பாய்கிறது"

என்று கி. பி. 140-ல் வாழ்ந்த தாலமி (Ptolemy) என்பான் அங்கலாய்த்துக் கொண்டான். அவன் கூறும் இந்தியா தமிழ் இந்தியாவே யன்றி வேறல்ல. தமிழர் ரோம சாம் ராஜ்யத்துடன் வாணிபத் தொடர்பு கொண்டதற்கு அடை யாளமாக, தமிழகத்தில் ரோம நாணயங்கள் அடிக்கடி அகப் படுகின்றன. பழனி தாலுகா கலயமுத்தூரில் ரோம சக்ர வர்த்தியான அகுஸ்தனது தலைபோட்ட 63 தங்க நாணயங் கள் ஒரு மண் செப்பில் கிடைத்தன. கிறிஸ்துவுக்கு முற் பட்ட காலத்திலிருந்தே ரோமர்களுக்கும் தமிழர்களுக்கும் வாணிபத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. அது மட்டு மல்ல; சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் வாணிபத் துறையில் நன்கு பயிற்சி பெற்றிருந்ததாக ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர்.

கி. பி. 7-வது நூற்றாண்டில் சோழர் ஜப்பானோடு வாணிபம் செய்துவந்தனர். இராஜஇராஜ சோழன் காலத் தில் கப்பல் வாணிபம் தமிழகத்தில் முன்னெப்போதும் இருந்ததைவிட முதன்மை பெற்றிருந்தது. சோழரது கப்பல்கள் நாகப்பட்டினத்திலிருந்து சாவகத் தீவிற்கு தினமும் போய்க்கொண்டிருந்தன.

கப்பற்றொழில்

தமிழகத்தில் கப்பற்றொழில மிகவும் உயர்ந்த நிலையி லிருந்ததும் தமிழர் வாணிபத்தில் முதன்மை பெற்றிருந்த தற்கு முக்கிய காரணமாகும். கப்பற்றொழிலின் நுட்பங் களை விளக்கும் தனி நூல தமிழில் இருந்துவந்ததாகத் தெரி கிறது. இதை தமிழகத்துடன் வாணிபம் செய்துவந்த அராபியர்களில சிலர் எழுதி வைத்துள்ள குறிப்புகளி லிருந்து அறிய முடிகிறது. மிகப பெரிய அளவில முன் னேற்ற மடைந்திருந்த ரோம் சாம்ராஜ்யத்திலும பிற நாடு

களிலும் பலகைகளை ஆணியடித்து ஒன்றுசேர்த்து கப்பல் கட்டிய காலத்திலேயே, தமிழ் நாட்டினர் பலகைகளை ஒன்றோடொன்று பொருந்தியிருப்பது தெரியாதவாறு பிணைத்து அழகான கப்பல்களைக் கட்டினர்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே எகிப்து தேச மன்னன் சாலமன் தமிழ் நாட்டிலிருந்து குரங்கு மயில் முதலியவைகளைப் பெற்றுச் சென்றதாகத் தெரிகிறது.

சுருங்கக் கூறின், இன்று உணவு உட்பட பிற எல்லா வாழ்க்கைப் பொருள்களுக்கும் தமிழகம் வெளி நாடுகளை எதிர்பார்க்கிறதல்லவா? இதற்கு நேர்மாறாக, உலக நாடுகள் அனைத்தும் தமது தேவைக்கு தமிழகத்தை எதிர்பார்த்து நின்றன. இந்தியா என்ற பெயரில் பண்டைநாள் வாணிபம், அரசியலைப்பற்றி உலக அறிஞர்கள் கூறியுள்ள புகழ் மொழி கள் பெரும்பாலும் தமிழகத்துக்கே உரியதாகும்.

மேற்சொன்னவையனைத்தும் சுதந்தரத் தமிழரசில் தமிழர் வாணிபம் நடத்திய வரலாறு. இன்றும் தமிழகம் இருக்கிறது. அதில் வாழ்வோரும் தமிழ் மக்கள்தான். ஆனால், தமிழரசில்லை; எனவே உலக வாணிபம் தமிழரிட மில்லை. இனி, காங்கிரஸ் கருதியுள்ளபடி தமிழகம் தனியா னாலும்கூட அதில் அரசியல் நிர்ணய மன்றத்தார் வகுத் துள்ள ஆதிக்க அரசியலே அமுல் நடக்குமானால், இழந்த வாணிப உரிமைகளை தமிழகம் பெறுவது இந்த யுகத்தி லில்லை. ஏனெனில், புதிய அரசியலின்படி தமிழகம் தனி நாடல்ல; நிர்வாக மாகாணம். தமிழர் தனி இனமல்ல; இந்துக்களில் ஒரு பகுதியினர். தமிழரின் வருங்கால வாழ் வுக்கு வழிகாட்டும் வரலாறு சேர, சோழ, பாண்டியருடைய தல்ல; அசோகருடையது! சிவாஜியுடையது. அடிமைப் பட்ட தமிழகமே! நீ உன் வரலாற்று வழி வாழும் நாள் எந் நாளோ!

பொங்கலோ பொங்கல்!

(அண. இராமநாதன்)

பொங்கலோ பொங்கலடா!—தமிழன்
புதுமையும் பழமையும் போற்றிடும் பொங்கல்!
மங்கிய ஏழைகள் வாழ்வை—ஒருநாள்
வந்துவளந்தந்து மகிழ்விக்கும் பொங்கல்!
தங்கிய நாளெல்லாம் ஏங்கி—ஊணுக்குத்
தவித்து மெலிந்து வயலில்—உழைக்கப்
பொங்கிய பொங்கலடா!—ஏழையின்
புனிதச்செங் குருதியால பொருந்திய பொங்கல்! (க)

தண்டமிழ் நாட்டில், உழைப்போர்—பயனைத்
தநதிடும் நாளிதே! செல்வனும் பேற்றைக்
கண்டும கிழ்ந்திடல் இன்றே!—மக்களின்
கருத்தும கிழ்ந்திடும் நாளிதில், நம்மின்
தொண்டனவ் வள்ளுவன் பேரால்—ஆண்டினைத்
தோற்றித்தை முதல்திங்கள் எனக்கொண்டால் என்ன?
கொண்டுள்ள ஆண்டினைக் காண்மின்!—அதனில்
குறித்துள்ள கருத்துக்கள் பொருந்தாத தறிவீர்! (உ)

பாழ்பட்ட நாடாக்கும் சூழ்ச்சிப்—பிசாசு
பறந்திட்ட நாளென்று எண்ணெய்நீ ராடி;
வாழ்வுயர் மானத்தைக் காத்துச்—சிறந்த
வளமுள்ள நாளென்று புத்தாடை கட்டி,
தாழ்வுற்ற ஏழைகள் துன்பப்—பசியைத்
தவிர்த்திட்ட நாளென்று புத்தூண் அருந்தி,
வாழ்விக்க வந்தஇப் பொங்கல்—நன்னாளில்
வகையுடன் கூடிக் குலவுவோம் வாரீர்! (ங).



பில்ஹணன்

காதல் சித்திரம்

டி.கே.எஸ் & பிரதர்ஸ் &
சேலம் ஷண்முகா பிலிம்ஸ்.

... தயாரிப்பு ...

T.K.ஷண்முகம் · T.K.பகவதி · M.S.திரௌபதி

...மற்றும் M.S.B.S. சபா நடிகர்கள் நடித்தது.....

G.H.Rao

டைரக்ஷன்: K.V.சீனிவாசன் ◊ ஸ்டூடியோ: சென்ட்ரல்

கலை இன்பம்

[தென்னாப்பிரிக்கா—டர்பன்—திரு. ச. மு. பிள்ளை]

கலை என்பது உள்ளத்தில் எழும் உணர்ச்சியின் பிரதிமை; அழகின் வடிவம். கவிஞனோ, அல்லது சைத்ரிகனோ ஒரு பொருளைக் காண்கிறான்; உள்ளத்தின் நிகழ்ச்சியை கவனிக்கிறான். அது அவன் உள்ளத்தை சலிப்பிக்கிறது; ஹிருதயத்தை அலைக்கிறது. அந்த உள்ள நெகிழ்ச்சியை, அதன் வேகம் குன்றாமல் வெளிப்படுத்துகிறான். அது கவிதையாக இருக்கலாம், ஓவியமாக இருக்கலாம், அல்லது சிற்பமாக இருக்கலாம். அம்மாதிரி முடிந்த வடிவம்தான் கலை.

கலை என்பது ஒன்றுதான். அதன் இயக்கங்கள் பல துறைகளில் பல வடிவுகளைப் பெறலாம். ஆனால், அதன் நாடி ஒன்று; அதன் ரகசியம் ஒன்று. அது இருதயத் துடிதுடிப்பின் பேச்சு; அழகுணர்ச்சியின் வடிவம். அழகு என்பது உலகத் தோற்றங்கள் மனித [illegible]களுடன் ஒ[illegible]பட்ட ஒற்றுமை. இவ்வித அழகுக்[illegible]துசெய்யும் பேச்சுதான் கலை.

ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனிப்பட்ட கலாபாவம் உண்டு. கலையின் தத்துவம் ஒன்றுதான்; அதன் அடிப்படையான விதி ஒன்றுதான். ஆனால், அது சமுதாயத்தின் வாழ்க்கைக் கண்ணாடி; வாழ்க்கைக் கனவு. ஒரு கலையின் மேதையை, அந்தச் சமுதாயந்தான் பூரணமாக அறிய முடியும்.

இலக்கியம், கலைகள் எல்லாவற்றிலும் உயர்ந்தது. கவிதை கலையின் அரசி. ஓவியமும் சிற்பமும் கலைதான். அவை காணப்படும் கலை, அதாவது அதன் வடிவம் எண்ணத்தைக் கட்டுப்படுத்துகிறது; எல்லைப்படுத்துகிறது. கவிதை அப்படியல்ல. கேட்கப்படும் கலை. கம்பன் 'செவிநுகர் கவிகள்'

என்று சொல்லுகிற மாதிரி, கவிக்கு காதுகள் பிரதானம், கவிதையில் வடிவெடுக்கும் எண்ணங்கள், உள்ளத்தில் எதிரொலித்துப் பேரலையான கனவுகளை எழுப்புகின்றன. புதிய எண்ணங்களைக் கொண்டுவந்து குவிக்கின்றன. கவிதை. கலையின் சிகரம். கலை, மனிதனின் கனவுகள் பெறும் வடிவம். அது நடைமுறை உண்மைக்குக் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை. அதாவது நடைமுறை உலகம் அறிந்த, இரண்டும் இரண்டும் நான்கு என்ற உண்மைகளுக்கு அதில் இடமில்லை. கலை, உலகத்தைப் புகைப்படம் பிடிக்கும் கருவியல்ல. சிருஷ்டியின் ரகசியத்தை, சிருஷ்டியின் மகத்துவத்துடன் வெளிப்படுத்தும் ஓர் பாஷை. கலை வாழ்க்கை ரகசியத்தை உணர்த்துவது; வாழ்க்கைத் தத்துவத்திற்குக் கட்டுப்பட்டது; ஆனால், வெறும் உயிர் வாழ்தல் என்ற தத்துவத்திற்குக் கட்டுப்படாதது. அதனால்தான் கலைக்கும், நடைமுறை உண்மைக்கும் எப்பொழுதும் ஒத்துவராமல் இருக்கிறது.

கலை அறநெறியைக் கற்பிக்கவோ, ஒழுக்க நூலை இயற்றவோ; அன்றி உடற்கூறு நூலை எடுத்துக்காட்டவோ வரவில்லை. பத்துத்தலை ராவணனும் ஆறு தலை சுப்ரமண்யனும். உடற்கூறு நூலுக்குப் புறம்பான அபத்தமாக இருக்கலாம், ஆனால், ஒரு கொள்கையை, ஒரு லட்சியத்தை உணர்த்தக்கூடியது. அதுதான் கலைஞனின் இலட்சியம்.

கலை ஒரு பொய்; அதிலும் மகத்தான பொய். அதாவது, மனிதனின் கனவுகளும், உலகத்தின் தோற்றங்களும் எவ்வளவு பொய்யோ அவ்வளவு பொய். இந்தக் கலை என்ற நடைமுறைப் பொய்தான், சிருஷ்டி ரகசியம் என்ற மகத்தான மெய்யை உணர்த்தக்கூடிய திறன் படைத்தது. கலை என்ற மகத்தான பொழுது போக்குதான், சிருஷ்டியின் மகத்தான விளையாட்டைக் காண்பிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது.

தத்துவ அறிஞன் ஒருநாளும் சிருஷ்டியின் மேதையை அறிய முடியாது. என்ன இருக்கிறது, என்று பிரித்துப்

பிரித்து அளக்கிறான்; அறிகிறான். ஆனால், எப்படி இருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது. தத்துவ அறிஞனுக்கு ஒரு கண்ணீர் துளி, ஒரு சொட்டுத் தண்ணீரும், சில உப்புகளும் என்றுதான் தெரியும். அந்தக் கண்ணீரின் இரகசியத்தை அதன் வரலாற்றை அவன் அறிவானா?

அது கலைஞனுக்குத்தான் முடியும். அவன்தான் தோற்றங்களின் ஒன்றுபட்ட ஒற்றுமையில் எழுந்த அழகுடன் காணுகிறான். அவன் சிருஷ்டி செய்கிறான். அதனால்தான் வாழ்க்கையின் மேதையை அவனால் உணர முடிகிறது. கவிஞன் பக்தனாக இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால். கலைஞன் பக்தனாக இல்லாமலிருப்பதில் அதிசயமில்லை. அவன் சிருஷ்டி அகண்ட சிருஷ்டியுடன் போட்டி போடுகிறது. அதில் பிறக்கு குதூகலந்தான் கலை இன்பம்.

K. கண்ணன் அண்ட் கோ

பிளாக்—தயாரிப்பவர்கள்

லைன்; ஆப்-டோன், லைன் & ஆப்டோன், இரண்டு கலர், மூன்று
கலர் முதலிய பிளாக்குகளை சுத்தமாகவும் குறித்த
— காலத்திலும் செய்து தருகிறோம். —

ஒரு முறை விஜயம் செய்பவர்கள் எங்களுடைய
நிரந்தர வாடிக்கைக்காரர்களாகி விடுவார்கள்.

விவரங்களுக்கு:—

K. கண்ணன் அண்ட் கோ

பிளாக்-மேக்கர்ஸ்

பாண்டிபஜார்—தியாகராயநகர்—சென்னை.

வெளியிட்டோர்: ம. பொ. சிவஞானம் 1-29 இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. அச்சிட்டோர்: கு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை.

ஓங்குக தமிழ்! உயர்க தமிழகம்!!

பண்டைச் சிறப்புடன், புத்தொளி வீசும் புதிய தமிழகத்தைக் காணவிழையும் தமிழ்ப் பெருமக்களுக்கு எங்களது பொங்கல் வாழ்த்து உரியதாகுக.

●

அறிவை வளர்க்கும் அரசியல், பொருளாதார, சமூக இலக்கிய நூல்களும், திங்கள், கிழமை, இதழ்களும்,

தலைவர் ம. பொ. சி. எழுதிய தமிழன் குரல், கப்பலோட்டிய தமிழன், சிலப்பதிகாரமும் தமிழரும் என்ற நூல்களும் இன்னுமிதர பதிப்பக வெளியீடுகளும் எங்களிடம் கிடைக்கும்.

●

இந்தியன் நியூஸ் ஏஜன்ஸி,

புத்தகம், பத்திரிகை முதலிய பொது வியாபாரம்

1, பாப்பலோ ரோடு — சிங்கப்பூர்.

Wrapper Printed at the Sengunthа Mithran Press, Madras 1